# எழுத்து


*படைப்பாளிகளுக்கு*
தலையங்கம்

*தமிழன் சிந்திக்க*
சி. சு. செ.

*பாரதிதாசன்—அழகின் சிரிப்பு*
சி. கனகசபாபதி

*நமது நாடக இலக்கியம்*
டாக்டர் மு. வரதராசனுர்

*அன்று சொன்னது இன்றைக்கும்*
*மானம் காத்த மாஷாணம்*
ந. சிதம்பரசுப்ரமண்யன்

*மறு பிறப்பு*
தி. சோ. வேணுகோபாலன்

*முதுமை*
டி. எஸ். இலியட்

*உங்கள் காதுக்கு*
*எண்ணத் திவலைகள்*
கி. ரா.

*பாரதியின் சொல்வள செல்வாக்கு*
*உலகளக்கும் உத்தமர்கள்!*
சு. சங்கரசுப்ரமண்யன்

*எழுத்தரங்கம்—ஆசிரியர் பேச்சு*



ஏழாம் ஆண்டு

ஆசிரியர்: *சி.சு.செல்லப்பா*

# 83

நவம்பர் 65

50 பைசா

7-ம் ஆண்டு
ஏடு 83
நவம்பர்
1965

# எ ழு த் து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா-

தலையங்கம்

## படைப்பாளிகளுக்கு

கலை-மனிதப்பண்புக்கு வகை செய்யக்கூடிய எழுத்து பெருக நம் தமிழ் பேனுக்கள் இனி என்ன செய்யப் போகின்றன என்பதே நம் முன் உள்ள கேள்வி. இந்த மாதிரித்தான் செய்யவேண்டும் என்று சட்டமிட நமக்கு அதிகாரம் இல்லை ; ஆனால் திட்டமிட உரிமை உண்டு. திட்டமிட்ட எழுத்துப் போக்கு இன்றுதேவை. இன்று எழுதுகிறவர்கள், எழுத முற்படுகிறவர்கள் எல்லோருமே தங்களை கொஞ்சம் நன்ருக பார்த்துக் கொள்ளவேண்டும். அரிச்சுவடி இலக்கியத்துக்கும் உண்டு.

அன்று, வரதட்சிணை, சீர்வரிசை பிரச்னை, 'குளத் தங்கரை அரசமரம்'வளர, வைதவ்யப்பிரச்னை 'பூச் சூட்டல்' நடத்த, சமூகத்தின் கபடப்போக்கு 'நாகசகாரகும்பல்' சேர, பெண்மையின் அந்த ரங்கப்புழுக்கம் 'தாய்' பிறக்க, கலாவறட்சி வானம்பாடி' வெளியேற, நகரவாழ்வு ஆசாரம் அந்திமந்தாரை' பூக்க, நசுக்கப்பட்ட காதல் பிரபஞ்சகானம் இசைக்க, மேல்பூச்சுமயக்கம் என்று வருவானே' வர வகை செய்தது, அந்தக் காலத்து உணர்வும் பார்வையும். நேர்ப்பான உணர்வு, சத்தான பார்வையின் விளைவுகள் அந்த படைப்புகள்.

இன்றும் இந்த இரண்டும்தேவை நமது இன்றய பேனுக்காரனுக்கு. மேலே சொன்னபடி இந்த காலத்து உணர்வு,பார்வை இரண்டையும் காட்டி, பின்னுக்கும் பொருள் மதிப்பு நீடிக்கும் தன்மை யானதாக விஷயத்தை தேர்ந்தெடுக்க வேண்டி யது படைப்பாளியின் வேலை. விஷயத்துக்கு தக்க மதிப்பு ஏற்றுவதும் அவன் கொள்ளவேண்டிய உத்தேசம்.

மேலே குறிப்பிட்ட கதைகளைப் போன்றவை களை தனக்கு மூன்னேடிகள், வெகு சமீபத்திய மரபு என்று கொள்ளவேண்டுமே தவிர தான் காப்பியடிப்பதற்காக இல்லை என்று தனக்குள் சொல்லிக்கொள்ள வேண்டும் படைப்பாளி.

வாழ்க்கையை பார்த்து, ரசித்து, உணர்ந்து எழுதவேண்டும். அப்படிப்பட்ட எழுத்துக்கள் மேலே குறிப்பிட்ட கதைகள். அதனுல்தான் மன வளம், குணவளம், பொருள் வளம்பெருக அமைந் திருக்கின்றன. புத்தகங்களை படித்துவிட்டு மட் டுமே படைப்பை பிறப்பித்துவிட முடியாது. புத் தகங்கள் பார்க்கவைக்கும், சிந்திக்க வைக்கும், கோடி காட்டும், மூலப்பொருளை தராது. அதை வாழ்க்கையிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டும். புத்தகத்தில் உள்ளதை மூலப்பொருளாக நீ கொண்டால் தொலைந்தாய்!

ஒன்றை எழுதுமுன் அது ஏற்கெனவே கையாளப்பட்டிருக்கிறதா என்று முதலிலும், சிறப்பாக கையாளப்பட்டிருக்கிறதா என்று அடுத்தும் பார்க்கவேண்டும்.கையாளப்பட்டிருந்தால் நீர்த்து எழுதக்கூடாது. சிறப்பாக கையாளப்பட்டிருந் தால் கிட்டவே போகக்கூடாது.

எந்த துறையில் ஒருவன் ஈடுபட விரும்பு கிருனே அவன் அந்த துறையில் இதுக்கு முன் தன் மொழியில் வந்திருப்பதை அறிந்துகொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் தன்னுல் ஏதாவது புதுசாக செய்ய முடிகிறதா என்பதை பார்க்க அவனுக்கு சாத்தியமாகும்.

அதுமட்டும் இல்லை, தன் மொழிக்கு அப்பா லும் அவன் பார்வை வீசி இருப்பதும் அவசியம். இவ்வளவு இருக்கிறதே எப்படி அறிவது என்று மலைத்து நின்ருல், தன் இருபக்கத்திலும் உள்ள புல்லுக்கட்டுகளில் எதை தின்பது என நிதானிக்க முடியாமல் பட்டினிகிடந்து செத்த கழுதையின் கதை ஞாபகத்தில் இருக்கவேண்டும். ஒரு புள்ளி யில் ஆரம்பித்தால் கோடும் வட்டமும் வளரும். ஒரு கட்டத்தில் ஆரம்பித்து முன்னும் பின்னும் தொடரலாம்.

பிறமொழி இலக்கிய வளம் ஒரு வைடமின் உணவு; ஊட்டம் தரும். நீ பிறருக்கு ஊட்டம் தர உன்னை தயாரிக்கும். இல்லாவிட்டால் கிணற்றுத் தவளை கண்ட உலகம்தான் எல்லாம்.ரஷ்ய படைப் பாளி மைக்கேல் ஷோலோகாவ்வுக்கு நோபல் பரிசு என்ருல் எதனுல் என்று தெரிந்திருக்க வேண்டாம்?

தன் இடத்தையும் தன் காலத்தையும் தன் வாழ்வையும் கொண்டு ஒரு படைப்பு இருந்தா லும் அது எந்த இடத்துக்கும் எந்த காலத்துக்கும் எந்த வாழ்வுக்கும் பொருத்திச் சொல்ல முடிகிற போது யூனிவர்சாலிட்டி என்கிருேமே 'பிரபஞ் சீயம்' (ஜீவாநந்தம் ஆக்கின சொல்) என்கிற தன்மை இருப்பதை பார்க்கமுடிகிறபோது, அது தனி நாட்டுக்கான இலக்கியம் என்பதுக்கும் மீறி உலகத்துக்கான இலக்கியமாக கருதப்படும்போது உலகப் பரிசுக்கு அது தகுதி உள்ளதாக ஆகிறது. ஆகவே தன் காலத்தில் கால் ஊன்றி காலத்துக்கு மேல் எம்பி நிற்கும் எக்காலத்துக்கும் மதிப்புக் கொண்டைவைகளுமான உலகத்துப் படைப்பு களுடன் பரிச்சயம் கொள்ளாத, பூனை கண்ணை மூடிக்கொள்கிற மனப்பான்மையை உதறியாக வேண்டும்.

முடிவாக, இவ்வளவுக்கும் மேலே கற்பனை. நிகழ்ச்சியை கதையாக்க முடிகிறது கற்பனை யாலேதான். கற்பனை இல்லாவிட்டால் வர்ண னையே சாத்தியமில்லை. வர்ணிக்காமல் அழகாகச் சொல்ல முடியாது அழகில்லா விட்டால் கலை இல்லை, ஆகவே கற்பனையாலே அழகாக வர்ணிப் பது படைப்பாளனின் சொல்வழி, இந்த சொல் வழியை சொல்லித்தர முடியுமா?'சொல்லித் தெரி வதில்லை மன்மதக்கலை' என்ற பாரதி கவிதை வரி மாதிரி இதை டியூஷன் மூலம் உட்புகுத்த முடி யாது. மேலே குறிப்பிட்ட அரிச்சுவடி பாடங்களை யாவது கற்றுக்கொண்டால் அதன் விளைவாக அவனுக்கு கற்பனைக் கண் திறக்கலாம்.

# தமிழன் சிந்திக்க

## சி. சு. செல்லப்பா

தமிழ் நாட்டில் எந்தெந்த துறைகளில் எல்லாமோ வளம் பெருகியும் நல்ல வாழ்வு காணமுடியவில்லை என்று நான் நினைக்கிறபோது நான் ஒற்றைமரத் தோப்பாக நினைக்கிற விசித்திர பிரகிருதியோ என்றுகேட்டுக்கொண்டேன். இல்லை. இதோ, சி. மணி என்கிற புதுக்கவிதை படைப்பாளியின் வரிகள் :

தமிழகம் கீழுமல்ல/முழுதும் மேலுமல்ல
உலையேற்றிவிட்டு/சோறுக்க மறியல்;
பட்டினியும் அழிவுமே கிடைத்த பயன்;
பின்னாலும் போகவில்லை
முன்னாலும் நடக்கவில்லை;
நடுக்கிணற்றில் நிகழ்காலம்.

இது கவி வாக்கு. சீறல் வேகம் 'அதிகம்தான். அடிநாக்கிலே இருந்து எழுகிற கசப்பு தொனிக்கிறது. பாரதியும் அன்று அப்படித்தானே பாடினான் 'ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய் வாழ்கின்றோம்' 'நரிவுயிர்ச்சிறு சேவகர்தாதர்கள்/நாயெனத்திரியொற்ற ருணவினைப்/பெரிதெனக் கொடுதம்முயிர் விற்றிடும் பேடியர்பிறர்க்கிச்சகம் பேசுவோர்/கருதுமிவ்வகை மாக்கள்' என்ற வரிகள் அன்றய தமிழகத்தை கண்டு கசந்து சீறிவந்த சொற்கள் தானே?

ஆகவே அடிமை இந்தியாவிலும் சரி. சுதந்திர இந்தியாவிலும் சரி நம் தமிழக வாழ்க்கைப் போக்கிலே காலத்துக்கு ஏற்ப அடிப்படையில் பொத்தல் இருப்பதாகவே படுகிறது. இல்லாவிட்டால் பாரதிக்குப் பின் தலைதூக்கிய வ. ரா. தன் கடைசி மூச்சுவரை இதே தொனியில் சுட்டிக்கொண்டிருந்ததேன்? பாரதிதாசனும் கூடத்தான். பிச்சமூர்த்தியும் கூடத்தான் கேட்கிறார் :

'சரித்திரம் வரலாறென்று/மண்வெட்டிகுந்தளத்தோடு பிணக்குழி பறித்துப் பார்த்தால்/வாழ்வின் கொதி உலைக்குப் பருப்பாமா?/பாஸ்பரஸ் சுருளும்/பனைஓலைப்பழம் பழுப்பும்/சென்ற பெருமையும்/வழக்கொழிந்த பண்பாடும்/இன்றய வாழ்வுக்கு/வழிவந்து காட்டுமா?/ மண்வெட்டி வந்தால் புழுதி எழும்/தர்க்கப் பந்தலெழும்/இன. மொழி, தேதிச் சுறுக்கு/நிகழ் நிமிஷப்பரியின் கழுத்தில்/சூழ்ந்துகொண் டிறுகிக்கொல்லும்.

இவர்களை எல்லாம் எதுக்கு இங்கே இழுத்து வருகிறாய்? நீ சொல்லுகிற தென்ன என்று கேட்கத்தோன்றும், இவர்களில் யாரும் வாழ்க்கையை கண்டு அஞ்சியோடி ஏதோ ஒரு போதிமரத்தடியில் இருந்து குரல் கொடுத்தவர்கள் இல்லை. நம்மில் ஒருவராக இருந்து சிந்தித்தவர்கள்; சிந்திக்கிறவர்கள். பழய இலக்கியங்கள் எல்லாம் அந்தக் காலத்து உணர்வை நிலையை காட்டுபவை, பிரதிபலிப்பவை என்று விளக்க ஆராய்ச்சி நூல்களை குவிக்கிறவர்கள் இந்த இலக்கிய சிந்தனைகளுக்கும் அதே அந்தஸ்து கொடுக்க கடமைப் பட்டவர்கள் இல்லையா? பாரதி அன்றய அவல நிலையைக்கண்டு புழுங்கினான் என்று பேசினால் இந்த மனப் புழுங்கல்களும் அதேவித கவிதை நெஞ்சிலிருந்து கிளம்பினதுதானே. ஆகையால் இவர்கள் உணர்வை நாம் மதிக்கக் கடமைப்பட்டவர்கள். அதுக்காகவே நான் பிரஸ்தாபிக்கிறேன் — என் கட்டுரை பலத்துக்காக இல்லை.

சுதந்திரம் பெற்றதும் நாம் உலையேற்றினோம். இந்த பதினேழு ஆண்டுகளுக்குள் சோறு தயாராகிவிட்டதா? கேள்வி கேட்டுக் கொண்டால் சோறு தயாராக வில்லை. இன்னும் கொதி நிலையில்தான். சோற்றுக்கே இன்னும் வெளியாரை நம்பின வாழ்வு. உலை விஷயம் இருக்கட்டும் உலைக்கூடம் கூட தயாராகிக் கொண்டிருக்கிற நிலைதான். காந்தாரியாக உலையை இறக்க அவசரப்படுகிறவன் இருக்கட்டும். உலையை கவிழ்த்துவிட துடிப்பவனை என்ன சொல்வது? சோறுக்க மறியல் செய்பவன் இந்த புத்திக்காரன். இன்று தமிழகத்தில் இந்த மறியலைச் செய்பவர்கள்தான் எந்தத் துறையிலும் காணப்படுகிறார்கள். அதனால் முன்னால்போக முடியாத நிலை; பின்னாலும் போகாத நிலை ஏனென்றால் பின்னாலேஇருந்தது காந்தியுகம். அதுக்கு போகமுடியாது. அந்த வழி மறந்தே போச்சு.

ஏதோ பூடகமாகவே நான் பேசிக்கொண்டு வரவில்லை. நடுக்கிணற்றில் உள்ள நிகழ்காலத்தவனாகவே என்னைப் பற்றிய நினைப்பு. ஏதோ மனமுறிவு, அவநம்பிக்கை விரக்தி என்றெல்லாம் பட்டம் கட்டி என்னை புறக்கணித்து விடமுடியாது. 'மாரிக்கால வெள்ளம் போச்சு, மார்க்ஸ் கால வெள்ளம் போகும்' என்று பிச்சமூர்த்தி சொன்னது போல், வெள்ளங்களுக்கு நடுவே அகப்பட்ட நிகழ்காலத்தவனும்கூட நான். வெள்ளங்களுக்கு மேல் எழுந்து காட்டு வாத்தாகி, சிறகை விரித்து வாழ்வையும் வேடந்தாங்கலாக ஆக்கிக் கொள்ளும் லட்சிய ஆசையிலே தான் நான் சிந்திக்கிறேன். முதலில் அரசியல் துறையை எடுத்துக்கொள்கிறேன்.

இன்று அரசியல் என்கிறதின் முழு அர்த்தத்தை உணர்ந்து சிந்திக்கிறோமா, செயல்படுகிறோமா? கேட்கிறேன். கேட்டுக்கொள்கிறேன். உண்மையாக நமக்கு அரசியல் இன்னும் தெரியவே இல்லை. சுதந்திரத்துக்காக போராடினோமே அந்த சண்டை மனப்பான்மை தான் தொடர்

கிறது ஒரு வெறுப்பையும் கசப்பையும் அயலான் மீது காட்டி வந்தோமே அதே போக்குதான் இன்னும். எதுக்கும் சமாதானம் சொல்ல முடியும்; சொல்லிக்கமுடியும், சொல்லி திருப்திப் படுத்த முடியும்; சொல்லிக்கொண்டு திருப்திப்பட்டுக்க முடியும். நாம் வளருகிற தேசம்தானே. போதுமான அவகாசம் வேண்டாமா? இத்தனை வருஷம் ஆகவேண்டும்' இப்படி சொல்லிக்கலாம். ஒரு பழமொழி உண்டு. 'சிங்காரித்துக் கொள்வதுக்குள்ளே பட்டணம் கொள்ளை போய்விடும்' என்று. பாகிஸ்தான் கிட்ட கொள்ளை போகாமல் தப்பிக்கலாம். சீனுக்காரன் விஷயத்திலே தயங்கித் தானே நினைக்கவேண்டி இருக்கு. காலக் கணக்கு கணக்குப் பிள்ளை வேலை. அது எடுக்காது. ஆகவே காலக் கணக்கை விட்டுட்டு சிந்திக்கவேண்டும், போன யுத்தத்துக்கு அப்புறம் எந்த தேசமும் இப்படி கணக்குப்போட்டு செயல்படவில்லையே காலத்தை விரட்டிப் பிடித்திருக்கிறதைத் தானே பார்க்கிறோம்.

ஆகவே நமது அரசியல் பார்வை காலத்தை வெல்லக்கூடியதாக இருக்கவேண்டும். அதுஇல்லை. சுதந்திரம் அடைய இத்தனை ஆண்டு ஆச்சு என்கிற கணக்காக போட்டுக்கொண்டு சுதந்திரத்தை முழுமையாக்க இத்தனை ஆண்டு ஆகவேண்டும். ஆகும் என்று'ஒரு குருவி வந்து ஒரு நெல்லை கொத்திண்டுபோச்சு. இன்னொரு குருவி வந்து இன்னொரு நெல்லை' என்கிற கதையை சொல்லிக் கொண்டிருந்தால்? வீடு இடிந்து விட்டால் ஒரு நாளைக்கு ஒரு செங்கல் வீதம் அடுக்கிக் கொண்டு போனால் பொட்டலில் குடித்தனம் நடத்தும் நாளுக்கு முடிவு எப்பவோ?

காலத்தை வெல்கிற உண்மையான அரசியல் தேவை நமக்கு. இப்போது அரசியல் மனப்பான்மை காணப்பட வில்லை. கட்சி மனப்பான்மைதான் எங்கேயும். அரசியலுக்கு கட்சியா கட்சிக்காக அரசியலா? இப்போது கட்சிக்காகத்தான் அரசியல், எந்த கட்சியும் சரி. அப்புறம், கட்சிக்கு தலைவரா. தலைவருக்காக கட்சியா? அடுத்த சிக்கல். இன்னும், கட்சிக்காக கொள்கையா, கொள்கைக்காக கட்சியா? அடுத்த படியாக ஒரு கொள்கை ஒரு கட்சி என்றால் இன்னொன்று எதிர்க்கட்சி, இல்லை எதிரிக்கட்சியாகி விடுகிறது. எதிரிக்கட்சி என்றால் அது விரோதிதான் என்ற முடிவு. மாற்றுக்கொள்கை என்றாலே அதிலிருந்து ஒரு கால் புள்ளி அரைப் புள்ளியைக்கூட ஏற்றுக்கக்கூடாது. இதுக்கெல்லாம் மேலாக எதிர்க்கட்சி மேலே வெறுப்பை கசப்பை, குரோதத்தைக் காட்டித்தான் தன் கட்சியை வளர்க்கவேண்டும். மாற்றுக் கொள்கையை பரிகசித்து இழிவு படுத்தித்தான் தன் கொள்கையை பரப்பவேண்டும். வேறு அபிப்ராயக்காரனை தாக்கி அவன் கவுரவத்தைபெருமையை நாசப்படுத்தி தான் தன் கவுரவத்தை பெருமையைநிலைநாட்டவேண்டும் என்கிற தீர்மானம், எல்லாத்துக்கும்முத்தாய்ப்பாகஎனக்கு அதிகாரம் இருக்கு, பெரும்பான்மை ஆதரவு இருக்கு, எதையும் நான் செய்ய முடியும் அதுதான் சரி என்கிற மனப்போக்கு ஒரு புறம். மறுபுறம் என் வார்த்தை கேட்கப்படவில்லை, நான் சிறுபான்மை. எனக்குள்ள உரிமை மறுக்கப்படுகிறது. ஆகவே எதையும் ஏற்கமாட்டேன் என்கிற மனப்பான்மை.

சரியான அரசியல் நம் நாட்டில் உருவாகாததால் தான் இத்தனை கோளாறுகளும் நான்பொது அரசியல் நிலைமையைத்தான் சொல்லுகிறேன். பதினேழு வருஷ விளைவை வைத்து மதிப்பிடுகிறேன், கட்சிகள், கொள்கைகள், தனிமனிதர்கள் பெயர்களை சொல்லி நான் விளக்க முடியும். ஆனால் தமிழ் நாட்டில் யாருக்கு இது தெரியாது? ஜாதி மேலே துவேஷத்துக்கு ஒரு கட்சி, மொழி மேலே துவேஷத்துக்கு ஒரு கட்சி, வர்க்கத்தின் மேல் துவேஷத்துக்கு ஒரு கட்சி, மதத்தின் மேல் துவேஷத்துக்கும்கூட இன்று ஒரு கட்சி இருபதாம் நூற்றுண்டின் இந்தப் பகுதியில், நாட்டின் பகுதிகள்மீது துவேஷத்துக்கு ஒரு கட்சி, இதெல்லாம் இந்த பதினேழு ஆண்டுகளுக்குள் எப்படிவளர்ந்து விட்டன! அரசியல் வாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்களை இப்படி வளர விட்டதுக்கு முழுப் பொறுப்பும் பொதுமக்களாகிய நமது தான். நாம் சிந்திக்க தவறி விட்டோம். தங்கள் சாமர்த்தியத்தால் ஒரு சிலர் சிந்தித்து தம் வழியில் நம் மூக்கைப் பிடித்து இழுத்துச் சென்ற வழியில் வெகு தூரம் நடந்துவிட்டோம். நமக்காக அவர்கள் சிந்திக்கிறார்கள் என்று நம்பி அதிகாரப் பத்திரமும் கொடுத்து நாம் பாவைக்கூத்துப் பொம்மைகளாக ஆகிவிட்டோம்.

அன்று சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசியக் கொடிக்காக உயிர்விட முன் வந்தவர்களைப் பார்த்தோம். இன்று தேசியக்கொடிக்கு பதில் தேசக்கொடி பறக்கிறது. அது பறக்கும் உயரத்துக்கு மேல் தம் தம் கட்சிக் கொடியை உயர்த்தி கட்சிக் கொடிக்கு உயிர் கொடுக்கத் தயாராயிருப்பதாக மேடைகளிலே சபதம் இடுவதைபார்க்கிறோம்.அதனால்தான் தேசக்கொடிக்கு மரியாதை செலுத்தும் கடமை உணர்ச்சி வரவில்லை தமிழனுக்கு. சினிமா காட்சி முடிவில் தேசக் கொடி பறப்பதையும் தேச கீதத்தையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் நகர்ந்து கொண்டே இருக்கிறான்.

இன்றய கட்சிகள் உரிமையைப் பற்றிப் பேசுகின்றன. கடமையை போதிப்பதில்லை. தன் கட்சியை பின்பற்றுபவர்களுக்கு உணர்ச்சியை தூண்டிவிடுகின்றன. சமனப்படுத்தத் தெரியவில்லை வேகத்தை கிளப்பி விடுகின்றன. அடக்க சக்தி இல்லை. துவேஷத்தை எழுப்புகின்றன. மனிதாபிமானத்தை வளர்க்க வில்லை. எந்த ஒரு பிரச்னையிலும் இப்படித்தான் திருகின பார்வை.

நான் சொல்வதெல்லாம் ஒரு கூடை ஏடுகளாக வெளிவரும் அத்தனை பத்திரிகைகளின், ஒரு படையாகக் கிளம்பும் சொற்பொழிவாளர்களின் இந்த சுதந்திர காலத்து பேச்சுகளையும் எழுத்துக்களையும் கவனித்துத்தான். வ, ரா, குறிப்பிட்ட 'வசந்தகாலம்' நோக்கி நம் தமிழக அரசியல் திரும்பப்பெற—

காலக் கணக்கு போட நான் விரும்பவில்லை.

# பாரதிதாசன் — அழகின் சிரிப்பு

## சி. கனகசபாபதி

காணும் பொருளில் எல்லாம் அழகைக் காணவும், கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்கிற திறம் பெறவும் வேண்டும் என்று மனசில் எண்ணிப்பார்த்து 'அழகின் சிரிப்பை' எழுதத் தொடங்கினர் பாரதிதாசன் என்று தெரிகிறது.

அதாவது பாரதிதாசன் உட்கோளாகக் கருதியது அழகைக் காண்கிற ஒரு பார்வைத் திறமும் அழகைக் கண்டவாறு சொல்லோவியம் செய்கிற ஒரு பாட்டு (கற்பனை)த் திறமும்.

இங்கே 'கண்டவாறு' என்ற அவருடைய சொல்லால் அழகு இருக்கிறதை இருக்கிறபடி சொல்லவேண்டாம், அழகு இருக்கிறதைத் தன் காட்சியில் தனக்குத் தோன்றும்படி சொல்ல வேண்டும் என்ற பாரதிதாசன் வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட பார்வை புலனுகிறது. அப்படியானல் இது நடப்பியலான பார்வையா, புனைவியலான பார்வையா, வேறு எதுவா என்று கேட்டால் 'கண்டவாறு' என்ற சொல்லை வைத்து எது என்று கூறமுடியவில்லை.

வழிவழியாகக் கவிஞர்கள் செந்தாமரை என்றும் நிலவென்றும் கதிரென்றும் பாடிவிட்டார்களே, இனிமேலும் மற்றெரு கவிஞர் அந்தப் பழசாகிப்போன பொருள்கள் மீதே பாடலாமா? இப்படி ஒரு கேள்வி எழுவது இயற்கைதான். அப்படிப் பாடக்கூடாது கவிஞர்கள் என்பதல்ல. நிலவு முதலான என்றைக்குமான பொருள்களை என்றைக்குமே கவிஞர்கள் பாடலாம்; பாடுவார்கள் என்பதே கேள்விக்குப் பதில். ஆனல் பார்வை வேறுபட, கருத்துப் புதுமை தோன்ற உத்தியும் உயர்வாகப் பாடினல்தான் சுவை இருக்கும்; சமகாலக் கலைத்தன்மை அதில் சிறக்கும்.

உண்மையில் வழிவழியாக நிலவு முதலான அழகுப் பொருள்களைக் கவிஞர்கள் பாடியபடி அப்படி அப்படியே பாரதிதாசன் பாட எடுத்துக் கொள்ளவில்லை என்று அவர் முன்னுரையிலிருந்து தெரிகிறது.

'பிறமொழி தமிழ் மொழி நூற்களில் பார்த்த படியே எழுதும் நிலை தீரவேண்டும்.'

இதைப் படிக்கிறபோது தமிழ் இலக்கியங்களில் பார்த்த இயற்கை அழகுக் காட்சிகளை நகல் எடுப்பதுபோல் எடுத்துப் படைக்கவும் பாரதிதாசன் விருப்பப்படவில்லை என்றும் தெரிகிறது. தாம் தமது தனித்த பார்வையுடன் அழகைப் பாடுவதே அவர் உத்தேசமாக இருந்திருக்கிறது.

அழகைக் கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்து வெளியிடப் போவதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிருர் பாரதிதாசன். இதில் 'சொல்லோவியம்' என்ற சொல்லை நாம் பார்த்தால் இருபதாம் நூற்றுண்டில் கவிதைக்கும் ஓவியத்துக்கும் உண்டான தொடர்பை இது குறிப்பது போலவும், படிமவியலின் பக்கம்கூட வரக்கூடியது என்றும் எனக்குத் தோன்றுகிறது. அழகிலே ஈடுபடாத கவிஞர் உலகில் யாருமில்லை. அழகு ஈடுபாடு ஒவ்வொரு கவிஞரிடமும் வெவ்வேறு உருவத்திலும் கருத்துப் புதுமையிலும் புலப்படுகிறது. பாரதிதாசனிடம் அழகு ஈடுபாடு ஒரு புதுமையாகப் புலப்படுவது உண்மை; 'அழகின் சிரிப்பு' கலைத் தன்மையான படைப்பு என்பது ரொம்ப உண்மை.

2

'இருள்' பற்றியும் பாரதிதாசன் பாடியுள்ளார். இருளை மட்டும் பாட எடுத்துக்கொண்டது புதுமை என்றுதான் சொல்லக்கூடியது. கவிஞர்கள் எல்லாம் ஒளியும் இருளும் என்றுதானே பாடுவது வழக்கம்.

'ஆடிஓ டிப்போர் இட்டும்
அருந்துதல் அருந்தி யும்பின்
வாடியே இருக்கும் வைய
மக்களை உயிர்க்கூட் டத்தை
ஓடியே அணைப்பாய்! உன்றன்
மணிநீலச் சிறக ளாவ
மூடுவாய் இருளே, அன்பின்
முழக்கமே, உனக்கு நன்றி!'

இந்தப் பாட்டில் இருளுக்கு மணிநீலச் சிறகு உண்டு என்று கவிஞர் பாரதிதாசன் சொல்லும் போது, இருள் குஞ்சுகளைச் சிறகால் அணைத்துக் கொள்கிற பறவை என்று அழகான ஒரு உருவகத்தை நாம் நினைக்கிறேம். இருள் பறவை பாரதிதாசனுடைய சொல்படி ஒரு சொல்லோவியம். நம் ஆய்வின்படி ஒரு காட்சியொளிப் படிமம். படிமம் காட்டுகிற ஒரு உத்திச் சிறப்புடன் ஒரு தனித்த பார்வையும் கருத்துப் புதுமையும் பெற்றுள்ளது இந்தப் பாட்டு. வாடிய மக்களுக்குத் தனது அன்பால் அமைதியைக் கொடுக்கிறதாகக் கவிஞர் பாடியிருப்பதையே தனித்த பார்வை என்றும் அது கருத்துப் புதுமை என்றும் குறிப்பிட விரும்புகிறேன். இயற்கையின் அன்பைத் தனிமனிதவியலான போக்கில் பாரதிதாசன் இங்கே பாடியிருப்பதுபோல் தெரிந்தாலும், சமூகவியலான வாழ்க்கைப் போக்கிலே நம் கவனத்தைத் திருப்புகிறது இந்தப் பாட்டு. சமூக உணர்ச்சி அசைவு காட்டும் கலைப்போக்கு பாரதிதாசன் தனது தனித்துவமாகக் கொண்டது அவர் காலத்தில் என்பதை வெளியிட்டுக் காட்டுகிறது இந்த 'இருள்' பாட்டு.

இயற்கையைப் பாடும்போதும் சமுதாய நனவு நிலைக்கு வந்து விடுகிறார் பாரதிதாசன். கலைத் தன்மை குறையாமல் பாடியிருக்கிறாரா என்று நாம் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. மேலே உள்ள இருளைப் பறவை ஆக்கிய படிமம் சிறந்த கவிதை கலைத்தன்மையானதாக நிச்சயம் சொல்லலாம்.

சில சமயங்களில் பாரதிதாசன் சமுதாய நனவு நிலையில் திரும்பிவிட்டு அப்புறம் சத்தான கலைத் தன்மையைக் கைநழுவ விட்டுவிடுகிறார். நீதிப்படுத்துதலும் அழகுபடுத்துதலும் இணைந்த ஒரு பழய தோரணையில் அவர் பாடிவிடுகிறார்.

இருளைப் பற்றிய கடைசிப்பாட்டைப் பார்ப்போம்.

'பெட்டியில் இருப்ப தாகப்
பேசினார்; சாவி இல்லை;
எட்டுப்பேர் இதற்குள் தேளால்
கொட்டப்பட் டுத்து டித்தார்;
கட்டாயம் தூய்மை வேண்டும்
என்னுமோர் அறிவு தன்னை
இட்டளித் திட்ட நல்ல
இருளே உன் பெருமை என்னே!'

இதிலுள்ள 'கொட்டப்பட் டுத்து டித்தார்' என்னும் ஒரு வரி தேள் கொட்டுவதால் உண்டாகும் ஒரு துடிப்பைப் பொருத்தமான ஒலிநயத்தில் வெளியிடுகிறது. பாட்டிலுள்ள இப்பேர்ப்பட்ட அழகு இருளை நல்ல இருளாகச் சொல்லி ஒரு கருத்தைக் கட்டாயப் படுத்தும் நிலையைச்சேர்ப்பதால் குன்றிவிடுகிறது என்று நாம் பார்க்கலாம். முதலில் சொன்ன இருள்பறவை வந்த படிமப்பாட்டு,

'மூடுவாய் இருளே! அன்பின்
முழக்கமே, உனக்கு நன்றி!'

என்று முடிந்திருக்கிறது. இருள் தந்த அமைதிக்கு ஊடே ஒரு முழக்கத்தை இடுகிறார் கவிஞர். இங்கே முரண் என்ற அழகு மனசுக்கு இனிமை சேர்க்கிறது அல்லவா? இருள் பறவையை அந்தப் பாட்டில் பார்க்கிறதால் நம் காட்சிப் புலனில் ஒரு சுவை; 'அன்பின் முழக்கமே' என்று கவிஞர் சொன்னதில் நம் செவிப்புலனுக்கு ஒரு சுவை.

'வான்' பற்றிப் பாரதிதாசன் பாடி முடிக்கிற பத்தாவது பாட்டு இது,

'எத்தனை பெரிய வானம்!
எண்ணிப் பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு;
நீ அதில் சிற்றெ றும்பே'
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித் தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே!'

பாரதிதாசனின் அழகுப் பார்வை இயற்கை தரும் நீதி போதனையைச் சொல்லுவது என்று திரும்பியிருக்கிறது. ஒரே இடத்தில் நீதிபோதனையையும் அழகு படுத்தலையும் ஒரு கலப்பாக்கிக் கூறுகிற இந்தத் தோரணை ரொம்ப பழய கந்தலானது, வானம் நமக்குப் பாடம் கற்பிப்பதாக ஒரு அழகுப் பார்வைக் கவிஞர் நமக்குச் சொல்லுவார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அவரே சொல்லியானதும் இது பழய தோரணை, தற்காலத் தோரணை ஆகாது என்று நாம் பார்த்து விடுகிறோம். சமூக நிலைப்பாட்டாக எழுதும்போது எந்தக் கவிஞருக்கும் வரக்கூடிய குறைபாடு இது. இலக்கிய நோக்கிலிருந்து பார்த்தால், ஒட்டுப் போட்டுத் தைக்கும் பழய கந்தலான வள்ளுவ வியல்தோரணை. தற்காலப் பாங்குக்குச் சுவை யானதல்ல.

இயற்கையைப் பாடும்போது சமுதாய நனவு நிலைக்குத் திரும்புகிற பாரதிதாசன் கலைத் தன்மை குறையாமல் பாடியிருக்கிறாரா என்று நாம் பர்க்கவேண்டியதாக இருக்கிறது.

இருளையும் கிளியையும் பாடிய இரண்டு தனிப் பாட்டுக்களை எடுத்துக்கொண்டு அவைகளின் தோரணையை ஆய்வு செய்ய அடுத்தபடி போகிறேன்.

''எங்குசெல் கின்றாய்?' என்று
பரிதியை ஒருநாள் கேட்டேன்;
'கங்குலை ஒழிக்க' என்றான்.
கடிதுசெல் தம்பி என்றேன்.
அங்குனைத் தொடர்ந்தான்; நீயோ
அகல்வதாய் நினைத்தான்; என்னே!
எங்கணும் நிறைந்த நீர்நீ;
அதில், கதிர் சுழல்வண டன்றோ?''

இயற்கைப் பொருள்களிடம் கவிஞர்கள் பேசுவதாக அமைப்பது பழய நாள் முதல் இன்று வரை ஒரு உத்திதான். இருளை ஒழிப்பதுக்குப் பரிதி சென்றான். ஆனால் இருள் என்ற நீரில் விழுந்து விட்ட சுழல்வண்டாகி விட்டான் அவன். இந்த ஒரு அழகுப் பார்வையான காட்சி மட்டுமே பாட்டில் கவிஞர் வெளியீடு தந்திருப்பது. இதுக்குமேல் எந்த ஒரு சமுதாய நனவு நிலைக் கருத்தும் இந்தப் பாட்டில் இடம்பெறவில்லை. இருளை வெளியெங்கும் நிறைந்த தண்ணீர் என்றதும், கதிரவனை அத் தண்ணீரில் விழுந்து சுழலுகிற வண்டு என்றதும் யாரும் சொல்லியிருக்காத ஒரு அபூர்வப் படிமம், விஞ்ஞான நோக்கிலிருந்தும் இயற்கை உண்மை என்ற நடப்பியலான படிமம். எந்த ஒரு சமூகப் புற நிலைக்கருத்தும் தீர்ப்பும் சொல்லாத வகையில் இந்தப் பாட்டு தூய்மைத் தோரணையானது என்று மதிப்பிடலாம்.

'கொள்ளாத பொருள்க ளோடும்
அழகினிற் சிறிது கூட்டிக்
கொள்ளவே செயும் இயற்கை,
தான்கொண்ட கொள்கை மீறித்
தன்னரும்கை யிருப்பாம்
அழகெனும் தலைச்ச ரக்கைக்
கிள்ளியமைத் திட்ட கிள்ளாய்
கிட்டவா சும்மா வாநீ.'

கிளியைப் பற்றிய இந்தப் பாட்டில் இயற்கையின்

ஒரு செயல்மட்டும் கூறப்படுகிறது. தனது கையில் இருப்பாக உள்ள அழகுச் சரக்கைக் கிள்ளி எடுத்துக் கிளிக்கு வைத்து அமைத்ததாம் இயற்கை. இதுதவிர வேறொன்றும் கருத்தாகப் பாட்டில் வெளியீடு பெறவில்லை. கவிஞர் பாரதிதாசன் இந்தப் பாட்டையும் தற்காலப் பாங்கான தூய்மைத் தோரணையில் பாடியிருப்பது நமக்கு ரசனை தருவதாகும்.

3

'அழகின் சிரிப்பில்' பாரதிதாசன் மேலே கண்டு வந்திருக்கிறபடி 'இயற்கையை அன்பைப் பாட எடுத்துக்கொண்டு அவைகளைப் படிமங்கள் ஆக்குகிற கலைப்போக்கிலாவது, கலைத்தன்மை குன்றாமல் சமுதாய நனவு நிலையிலாவது, ஒரு தூய்மைத் தோரணையிலாவது பாடிப்போகிறது நன்றாகத் தெரிகிறது. 'அழகின் சிரிப்பு' முழுக்கவும் 'இயற்கையும் அன்புமே' பாரதிதாசன் கவிதைக்குப் பொருள்கள் என்று சொல்லமுடியாது. கொஞ்சம் பகுதியில்தான் இயற்கைக்கும் அன்புக்கும் இடம். 'அழகின் சிரிப்பில்' இடையே சமுக நிலைப்போக்கான எண்ணம் இயற்கையிலிருந்து இழுத்துவிடுகிறது கவிஞரை.

இயற்கையைப் பாடுகிறார் பாரதிதாசன் என்று சொன்னால் சரி, அன்பையுமா அவர் பாடியிருக்கிறார் என்று வாசகர்கள் என்னைக் கேட்கலாம். 'இருள் பறவை' பாட்டில் 'அன்பின் முழக்கமே' என்றதை முன்பே கண்டோம் அல்லவா? அதுபோல் தென்றலைப் பாடும்போது அன்பைப் பேசுகிறார் கவிஞர். வெளிப்படையாக அன்பு என்று பேசாமல் இயற்கையின் ஊடே அன்பு ஒரு பெருகிய உணர்வாகப் புலப்படுவதாக எழுதுகிறார். 'அழகின் சிரிப்பில்' பாரதிதாசன் எங்கும் பொங்கி நிறைந்துள்ளதாகிய அன்பைக் கலையுருவத்தோடு வெளிப்படுத்துகிறார் என்று நான்காண்கிறேன்.

ஆற்று வெள்ளத்தின் தோற்றத்தைப் பாடிய பாரதிதாசன் பாட்டை ஒரு உதாரணத்துக்குத் தருகிறேன்.

ஒலிஒன்று கேட்டேன். ஓஓ
புதுப்புனல்! பெரிய வெள்ளம்,
சலசல என்று பாய்ந்து
வரக்கண்டேன். தணல்நி றத்தில்
நிலவொத்த நிறம்க லந்து
நெடுவானின் சுடரும் வாங்கிப்
பொலிந்தது! கோடை யாட்சி
மாற்றிற்றுப் புரட்சி வெள்ளம்.'

இதில் இயற்கையின் ஊடே அன்பு உணர்த்தப் படுகிறது அல்லவா? இதில் ஆற்று வெள்ளத்தின் வருகைக்கு ஏற்றபடி ஒலிநயம் கேட்கிறோம். வெள்ளத்தின் நிறத்தை விழிப்பார்வைக்குத் தோன்றும்படி கவிஞர் பாரதிதாசன் எழுதியிருக்கிறார். அது தணல் நிறத்தில் நிலவொத்த நிறம் கலந்து இருக்கிறதாம்; நெடுவானின் சுடரும் வாங்கிப் பொலிகிறதாம். இதுக்கும் அடுத்தபடி கோடையின் ஆட்சியை மாற்றிய ஆற்றுவெள்ளத்தைப் புரட்சி வெள்ளமாக ஆக்கிவிடுகிறார் பாரதிதாசன். ஒரு 'அப்பாலைத் தன்மை' என்னும் அடிப்படைத் தத்துவத்தோடு முன்பு பாரதி பாடித்தந்த கலையைத் தாம் பின்தொடரவில்லை பாரதிதாசன் என்று தெரிகிறது. இந்த ஆற்றுவெள்ளம் பற்றிய பாட்டு கொஞ்சம்கூட அப்பாலைத் தன்மைகொண்டதாக இல்லை. 'அழகின் சிரிப்பில்' எங்கும் அப்பாலைத்தன்மை கிடையாது; ஒரு அநுபூதியிலும் கூட அமையவில்லை. இப்படி நான் சொல்லுவதால் 'அழகின் சிரிப்பில்' பாரதிதாசன் கலை குறைபட்டதாக ஆகிவிடாது. தற்காலத் தோரணைக்குக் கவிதையில் அப்பாலைத் தன்மையும் ஒரு புதிய அநுபூதியிலும் வருவது சிறப்புத்தான். இப்படி வராவிட்டாலும் அதனால் பரவாயில்லை. தற்காலக் கவிதையில் புற இயற்கையான பௌதீகத் தன்மையை மட்டும் பாடுகிற கலைப்போக்கு வரலாம். பாரதிதாசன் கலை ஆழ்ந்த அகநோக்கு உடையதல்ல; தூய அழகுணர்ச்சியான புற நோக்கு உடையது. மனித ஐந்து புலன்களுக்கும் மண்ணும் வானும் அன்போடு இன்பரசனை ஆகும்படி அழகுக் கலைப்போக்குடன் முன்புபாரதி பாடியிருப்பவர். பாரதியுடன் இந்தக் கலைப்போக்கில் ஒன்றுபட்டவர் பாரதிதாசன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இருவருக்கும் அகநோக்கா புற நோக்கா என்பதில் பார்வை வித்தியாசம் இருக்கிறது.

' தாரகை என்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போ மனமே!
ஈரச் சுவையதில் ஊறி வருமதில்
இன்புறு வாய் மனமே!'
' தூண்டும் இன்ப வாடை வீசு
துய்ய தேன்கடல்.'
' நீலி பராசக்தி தண்ணருட்—கரை
ஓரத்திலே புணை கூடுதே—கந்தன்
ஊக்கத்தை என்னுளம் நாடுதே!'

இது பாரதி கலை; அகநோக்கு உடையது.

'அதிர்ந்தது காற்று! நீளப்
பூங்கிளை அசைந்தா டிற்று!'

காற்றின் அதிர்வையும் மரக்கிளையின் மெல்லிய அசைவையும் ஒலிநயத்தோடு கொண்டுவரும் பாரதிதாசன் வரிகள் இவை.

'கூட்டமாய்ப் பறந்து போகும்,
சுழற்றிய கூர்வாள் போலே!
கூட்டினில் அசையும் வந்தே
கொத்தடி மைகள் போலே!'

அடைபடும் புறாக்களைப் பற்றிய 'பௌதீகத்தன்மையான அழகுப்பார்வை இதில் இருக்கிறது.

'எழுதிய தாளை நீஏன்
கிளப்பினை? என்று கேட்டேன்.
புழுதியைத் துடைத்தேன் என்றாய்;
மீண்டும்நீ புணர்ந்தாய் என்னை;'

தென்றலைப் பற்றிய இந்த வரிகளிலும் பாரதி தாசனுடைய புறநோக்கே தோன்றுகிறது. தென் றல் வந்து கவிஞருடைய எழுத்துக்கு விமரிசன வேலை செய்வதாகக் கற்பனை செய்திருக்கிறார் பாரதிதாசன். இப்படியெல்லாம் பொருள்களின் பௌதீகத் தன்மையை அன்பு தோன்றப் பாடு கிறதுதான் பாரதிதாசன் கலை; புறநோக்கு உடையது.

4

இயற்கையை அன்பைப் புறநோக்கில் பாடும் போது ஒரு நடப்பியல் பார்வையுடன் பாரதி தாசன் பாடுகிறார் என்று அடுத்தபடி எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

என்ன இப்படி நடப்பியல் என்றும் புனை வியல் என்றும் பிரித்துக்கூறலாமா என்று கேட் டால் பாரதிதாசனிடம் இந்த இரண்டு பார்வை களும் தனித்தனியே இருப்பதால் இரண்டையும் குறித்து ஒவ்வொன்றாகக் கூறியே தீரவேண்டும்.

'ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓர மெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல் மெத்தை......'

அழகின் சிரிப்பில் 'கடல்' பற்றி முதலில் பாடத் தொடங்கும் பாட்டிலுள்ள ஆரம்ப வரிகள். இவை 'ஊருக்குக் கிழக்கே உள்ள' என்பதில் இயற்கை யான பேச்சின் எளிய நடை அமைந்திருக்கிறது. அதாவது 'பேசுவதுபோல'ப் பாடவேணும் என்று பாரதிதாசன் தொடங்குகிற தற்காலத் தோரணை இதில் தெரிகிறது. நடப்பின் இயற்கைப் பேச்சி லிருந்து மொழி உருவாக்கி, அந்த மொழியில் புதிய பேச்சின் ஒலிநயங்களும் புதுப்புதுப் படிமங் களும் படைக்கிறது நாம் கண்டு வருகிற தற்கா லத் தோரணை. இந்தத் தோரணையில் கடல் மணல் கீரிப்பிள்ளையின் உடல் நிறம்போல என்று புதிய படிமத்தை விழிப் பார்வைக்கு அழகாகும் படி பாடியிருக்கிறார் பாரதிதாசன். இப்படிச் சொன்னது உண்மையில் ஒரு உயர்ந்த நடப்பியல் பார்வை.

'ஆறு' பற்றிய முதல்பாட்டு இதேநடப்பியல் பார்வை உடையது.

'இருபக்கம் மண்மே டிட்டும்
இடைஆழ்ந்தும், நீள மான
ஒருபாதை கண்டேன், அந்தப்
பாதையின் உள்இ டத்தில்......'

இதில் கவிஞர் தாம் கண்ட பாதையின் அமைப் பைச் சொல்வது ஒலிநய அசைவோடு செல்லு கிறது. ஓசையுடன் இதைச் சொல்லிக் காதில் கேட்டால்தான் இது புரியும். இது என்ன பிரமாத மான ஒலிநய அசைவா என்று கவிதை ஆய்வுடை யவர்கள், வாசகர்கள் என்னைக் கேட்கலாம். ஒரு கவிதைக்கு அதிலுள்ள உணர்ச்சிக்கும் பொரு ளுக்கும் மாறான ஒலிநயம் இருக்கப்படாது அல் லவா? பொருள் உணர்ச்சியைப் பின்னே தங்க விட்டுவிட்டு ஓசை மட்டும் வீறிப்பொங்கி ஒரே சப்தம் கொடுப்பதாக அமைந்தால் அதனால் கவி தையின் சுவை கெட்டுப்போகும்; அனுபவம் மாறி நிற்கும். பாரதிதாசன் ஒலிநயம் பற்றிய இந்த நனவு நிலையோடு 'அழகின் சிரிப்பை' எழுதியிருக் கிறார். சாதாரண இயற்கைப் பேச்சிலுள்ள ஒலி நயத்துக்கு மேல் அதிகம் செல்லவேண்டாம்என்று அவர் மேலே உதாரணம் கொடுத்துள்ள வரிகளில் அமைத்திருக்கிறார். பாதை ஒன்று பக்கங்களில் மேடுகள் பொருந்தியும், நடுவே தாழ்வாகவும், நீண்டு செல்லுகிறது உண்மைதானே. அதைத் தான் 'மேடிட்டும்' என்னும்போது மேடுகள் தெரி யும்படியும், 'ஆழ்ந்தும்' என்னும்போது தாழ்வு தெரியும்படியும், 'நீளமான' என்னும்போது பாதை தொடர்ந்து நீண்டுபோவது தெரியும்படி யும் ஒலிநய அசைவோடு பொருந்திய சொல் தொடர்ச்சியில் கொண்டு வந்திருக்கிறார் பாரதி தாசன். ரொம்ப வீறுப்பாக ஓசை பொருள் உண ர்ச்சியைக் கழட்டிவிட்டு ஓடும்படி பாரதிதாசன் அமைக்காததும், இயற்கைப் பேச்சின் இயற்கை யான ஒலிநயத்தில் உருவாக்கியதும் நாம் போற் றக்கூடிய தற்காலத் தோரணை என்று நான் கருது கிறேன். ஆங்கிலக் கவிதையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓசை வீறுப்பு இடம் பெற்றிருந்து, அடுத்த வளர்ச்சியில் மாறியது என்று டில்லியர்டு என்னும் திறனாய்வாளர் கூறுகிறார்.

பாரதிதாசனுக்கு, முன்பு பாரதிக்குக் கிடைக் காத வகையில், சங்கச் செவ்வியல் இலக்கியத் தைப் பார்க்கும்படியான சந்தர்ப்பமும் தொடர் பும் கிடைத்தன. அதனால் தமிழில் முற்பட்ட அந்தப் பழைய நடப்பியல் பார்வையில் பழக்கம் ஏற்பட்டிருக்கும் பாரதிதாசனுக்கு.

'காலே பரிதப் பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே;'

குறுந்தொகை—44.

'ஊர்க்கும் அணித்தே பொய்கை; பொய்
கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே;

குறுந்தொகை—113

இந்தக் குறுந்தொகைப் பாட்டுக்களின் வரிகள் இயற்கைப் பேச்சிலுள்ள ஒலிநயத்துக்குமேல் அதி கம் செல்லாத—ஓசை வீறுப்பு இல்லாத அசைவும் நடப்பியல் பார்வையும் கொண்டவை. 'அழகின் சிரிப்பில்' பாரதிதாசன் குரல் சங்கக் கவிகளின் குரலோடு இந்த வகையில் ஒப்புமை கொண்டிருக் கிறது என்று கூறமுடியும்.

பழைய மரபுவழியில் வந்த இப்படிப்பட்ட நடப்பியல் பார்வையில் 'அழகின் சிரிப்பு' முழுக்க வும் பாரதிதாசன் பாடவில்லைதான். அவர் பாடிய மட்டும் அந்தப் பார்வையைத் தற்காலத்துக்குத் தமிழுக்கு அவர் கொண்டு வந்தது பழசிலிருந்து உருவான புதுசுதான்.

(அடுத்த ஏட்டில் முடியும்)

# நமது நாடக இலக்கியம்

## மு. வரதராசனார்

*சென்ற மே மாதத்தில் நடைபெற்ற பி. எஸ். ராமையா மணிவிழாவில் 'தமிழ் நாடக இலக்கியம்' கருத்தரங்குக்கு தலைமை வகித்து பேசிய சொற்பொழிவு.*

நண்பர்களே, நாடகத் துறையிலே. சிறு கதைத்துறையிலே பொதுவாக எழுத்துத் துறையிலே பல ஆண்டுகள் ஊக்கத்துடன் உழைத்து, பலருக்கு வழிகாட்டியாக, பலருடைய வாழ்வு மலருவதற்கு காரணமாக இருந்த சிறந்த எழுத்தாளர் திரு பி. எஸ். ராமையா அவர்களுக்கு முதல் முதலாக நம்முடைய பாராட்டுதலையும் நன்றி அறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஒரு எழுத்தாளர் அவர் உள்ளத்தே அடங்கியிருக்கின்ற எழுத்துக்கலை மலருவதற்கு வாய்ப்புகள் சிலவாகத்தான் இருக்கின்றன. இது எல்லாரும் அறிந்த ஒரு உண்மை.

எத்தனையோ இளைஞர்கள் எழுத்தாளர்களாக மலருவார்கள் என்று நான் எண்ணியதுண்டு, அவர்களுக்கு ஆசிரியர்களாக இருந்துகொண்டு அவர்களுடைய எழுத்துக்களையெல்லாம் பார்க்கும் போது. ஆனால் ஒரு பத்தாண்டுகள் கழிந்தவுடன், நான் யார் எழுத்தாளர்களாக மாறுவார்கள், வளருவார்கள் என்று எண்ணினேனோ அவர்கள் அவ்வாறு வளரவில்லை அவர்களுடைய வாழ்வைப் பார்க்கும்போது, அவர்கள் உள்ளபடியேதான் எழுத்தாளர்களா அல்லது நம்முடைய அன்பின் மதிப்பைப் பெற்றவர்களா என்ற எண்ணம்தான் தோன்றும். அவர்கள் எங்கேயோ மங்கிக் கிடப்பார்கள். அதற்குக் காரணம் அவர்கள், இந்த எழுத்துத்துறையிலே எழுதியஇரண்டொன்றும் அச்சாவதற்கு இடமில்லாமல் போனது முதல் காரணம். இரண்டாவது, மீண்டும் தொடர்ந்து ஏதாவது எழுதலாமென்று அவர்கள் எண்ணினாலும் கூட அவர்களுக்கு ஏற்பட்ட வாழ்க்கைச் சிக்கல். குடும்பத்திலே தொழில் வகையிலே, பொருளாதார வகையிலே நெருக்கடியிலே ஏற்பட்ட அந்தச் சிக்கலால், எண்ணம் தோன்றும் போதே, அதே எண்ணம் கருகிப்போகும், இயற்கையிலேயே செடிகொடிகளிலே பார்ப்பது போலத்தான் இதுவும் இருக்கின்றது.

ஒரு ஆலமரத்திலே எத்தனையோ விதைகள் தோன்றுகின்றன. கோடிக்கணக்கான விதைகள் தோன்றுகின்றன: அத்தனை விதைகளும் ஆலமரமாக வளரும் ஆற்றல் இருந்துங்கூட, கடைசியில் ஒரு ஆலமரத்திலிருந்து இரண்டு மரமாவது தோன்றியதா என்று பார்த்தால், சொல்லமுடியாது. தோன்றியிருந்தால், உலகமெல்லாம் ஆல மரமாகவே இருக்கும். இப்படித்தான் பலருக்கு நவீன எழுத்துக்கலையின் விதை இருந்தபோதிலும் கூட, அந்த விதைகள் எல்லாம் அங்கேயே கருகிப் போகின்றன அல்லது தோன்றிய பிறகுங்கூட வாய்ப்பு இல்லாமல் வளர வழியில்லாமல் போகின்றன. தப்பித் தவறி அந்த இறைவனுடைய படைப்பிலே, தன்னுடைய படைப்பு தன்னுடைய ஆற்றலையே கொடுத்துப்படைக்கின்ற இறைவனுடைய அரும் செயலிலே ஒரு சில விதைகள் அருமையாக வளர்ந்து, பலருக்கு நிழல் தரும் ஆல மரமாகத் தழைத்து ஓங்கி வளருவதைக் காணும்போது, அது படைப்பிலே ஒரு அருமையான படைப்பு விதை என்றுதான் சொல்ல வேண்டும்.

பி. எஸ். ராமையா அவர்கள் முதலிலே சிறுகதை எழுதத்தொடங்கி பிறகு நாடகத்துக்கு வந்தவர்கள். அப்படித்தான் நினைக்கிறேன், நாடகம் ஒருபெரியகலை சிறுகதை, காவியம் இசை, நாட்டியம் எல்லாவற்றுக்கும் இடம் கொடுக்கின்ற ஒரு பெரிய தாய்க்கலை. அப்படி ஒரு தாய்க்கலை நன்றாக வளர்ந்து,அந்தக் கலை தமிழ்நாட்டிலே இன்று என்ன நிலையிலே இருக்கின்றது. என்று எண்ணிப் பார்க்கும்போது, அவ்வளவு பெருமையோடு தலை நிமிருவதற்கு உரியதாக இல்லை. சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் கொஞ்சம் மனத்திலே பட்டதைச் சொன்னால் தான், கருத்து வளருவதற்கு பொருத்தமாக இருக்கும். பக்கத்திலே இருக்கின்ற நம்முடைய மலையாள நண்பர்கள்வளர்த்துள்ளநாடகத்துறை, அதே போல ஆந்திராவிலே தெலுங்குமொழியிலே வளர்ந்துள்ள நாடகங்கள் இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வழிகாட்டியாக இருந்த தமிழ் இலக்கியத்துறை, இந்த நாடகத் துறையிலே எவ்வளவு பின்தங்கியிருக்கின்றது, எவ்வளவு குறுகி இருக்கின்றது, நன்றாக வளர முடியாமல் தேங்கியிருக்கின்றது என்பதை நாம் உணர்ந்தால் வருத்தமாய் இருக்கும்.

எல்லோருக்கும் ஆங்கிலத்தைப் பற்றி பலவகையான எண்ணங்கள் வரலாம். ஆனால் ஆங்கிலத்

துறையில் நாடகத்தைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் கடவுள் இவ்வளவு பட்சபாதமாக இருக்கின்றாரே என்றவருத்தம் உண்டாகிறது அங்குப்பாருங்கள், எத்தனை நாடகத்துறை எழுத்தாளர்களைப் படைத்தார்! தமிழ் நாட்டிலே அத்தனை பேரைப் படைக்க முடியாதா அவராலே? ஏன் தமிழ் இலக்கியத்துக்கு மட்டும் அவர் நல்ல மனத்தோடு நாடகக் கலைஞர்களை படைக்கவில்லை ? – என்றெல்லாம் எண்ணம் வருகிறது. அதை எண்ணும் போது ஒரு ஷேக்ஸ்பியரை எங்கேயோ, ஐரோப்பாவுக்கு அப்பாலே இருக்கின்ற ஒருசின்னத்தீவிலே படைத்து விட்டாரே, இங்கே எங்கேயாவது படைத்திருக்கக் கூடாதா அவரை என்றெல்லாம் ஒரு பொறாமையான எண்ணம் வருகிறது. ஒரே ஒருவர் 35 நாடகம் எழுதியிருக்கின்றார். 35 நாடகத்திலே ஒரு தலைவன் போல இன்னொரு தலைவன் பாத்திரம் இல்லை; ஒரு தலைவி போல இன்னொரு தலைவி இல்லை. ஒரு வில்லன் போல இன்னொரு வில்லன் இல்லை. 35 உலகைப் படைத்துக் காட்டியிருக்கின்றார். தமிழ்நாட்டிலே யார் நாடகம் எழுதினார்கள் என்று பழைய இலக்கிய வரலாற்றைப் படித்தால், ஒன்றுமே தெரியவில்லை. ஏதோ கல்வெட்டுக்களிலே. ராஜராஜன் நாடகத்தைப் பற்றிய குறிப்பைப் பார்க்கிறோம். எழுதின ஆசிரியர் யார் என்று தெரியவில்லை,

அதற்கப்புறம் யாரோ ஒரு அம்மா திருநெல்வேலி பக்கத்திலே நாடகக் குழுவுக்குத்தலைவியாக இருந்து நடத்தினார் என்று தெரிகிறதே தவிர, என்ன நாடகம், என்ன பெயர், யார் எழுதினார் என்று தெரியவில்லை. சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் என்று போற்றுகின்றோம். அதை நாடகம் என்று சொன்னால் பலர் சண்டைக்கு வருவார்கள். நானும் அப்படிப்பட்டவன். நாடகத் துறை இந்தநிலையிலே இருக்கின்றது. இப்படி இருந்த இருளடைந்த உலகத்திலே, நாடகத்திலிருந்து எங்கேயோ தோன்றி வந்த சிலகிளைகள் போல்பள்ளு, குறவஞ்சி இவைகள் எல்லாம் தோன்றி வளர்ந்திருக்கின்றன. இருந்த ஏட்டுச் சுவடி நாடகங்களையெல்லாம் படித்த புலவர்கள். நல்ல தமிழ் இல்லையென்ற காரணத்தாலோ, கொச்சை மொழி இருக்கின்ற காரணத்தாலோ அவைகளை எல்லாம் அப்படியே விட்டார்கள். இந்த 20-ம் நூற்றாண்டிலே, பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயும் சிலருக்கு நல்ல எண்ணம் வந்தது நாடகத்துறையிலே நாம் வளரவேண்டுமென்று. ஆங்கில இலக்கியத்தைப்படித்தவர்கள் அத்தனை பேரும் தமிழ் இலக்கியத்திலே நாடகம் வளர வேண்டுமென்ற நல்ல எண்ணம்கொண்டார்கள். சுந்தரம்பிள்ளைபோன்றவர்கள் எல்லாம் அந்த முயற்சியில் ஈடுபட்டார்கள்.

ஆனால் அவர்கள் கூட நாடகத்தை ஷேக்ஸ்பியர் போல படைக்க முடியவில்லை, ஷேக்ஸ்பியர் நாடகம் படிக்கவும் முடியும், நடிக்கவும் முடியும் என்ற வகையிலே-இரண்டு வகையாகவும் உதவக்கூடிய வகையிலே படைத்தார். சுந்தரம் பிள்ளை படிக்கத்தக்க நாடகத்தை படைத்தாரே தவிர, நடிக்கத் தக்க நாடகத்தைப் படைக்கவில்லை என்பதை நாம் அங்கே காணுவோம், இருந்தாலும் அவருடைய தொண்டு அருமையான தொண்டு என்பதை நாம் போற்றுவோம். இருபதாம் நூற்றுண்டிலே இந்த நாடகத்துறையிலே இந்தக் குறைகள் எல்லாம் போக்குகின்ற வகையிலே, நாடக மேடைகளுக்குப் பஞ்சமில்லை, நாடக மேடைகள் வளர்ந்தன. ஆனால் நாடகம் எழுதுகின்றவர்கள் அந்த அளவுக்கு வளரவில்லை. நாடக மேடைகள் வளர்ந்த அளவுக்கு, நாடக நடிப்புக் கலையிலே வளர்ந்த அளவுக்கு, நடிகர்கள் வளர்ந்த அந்த அளவுக்கு நாடக எழுத்தாளர்கள் வளரவில்லை. நாடக இலக்கியம் எழுதுகின்றவர்கள் வளரவில்லை. இந்தக் குறை இருபதாம் நூற்றுண்டு முழுவதுமே இருந்து வருவது போலத்தான் எனக்குத் தோன்றுகிறது. இன்றும் இருந்து கொண்டு வருவதால் தான் நம்மைப்பற்றி சில சொற்கள் கேள்விப்படும்போது கொஞ்சம் மானமாகவும் இருக்கின்றது. நாம் எல்லாம் கடன் வாங்கினோம், திருடினோம், வழக்குபோடுகிறார்கள்-இப்படியெல்லாம் படத்தொழிலிலும், மற்றத் தொழில்களிலும் கேள்விப்படும்போது. இந்த அளவுக்கா நாம் வந்துவிட்டோம் நாடகம் இல்லாத பஞ்சத்துக்கு என்று தோன்றுகிறது, நடிக்கின்ற நடிகர்கள் நல்ல நடிகர்கள். தலைசிறந்த நடிகள்இருக்கின்றார்களே, நாடக மேடையிலே, அந்தக் கலையை அருமையாகவளர்த்து இருக்கின்றார்களே? அப்படியிருக்கும்போது நாடகம் எழுதுகின்றவர்கள் தான் இல்லை என்று வருந்த வேண்டி வருகின்றது.

இந்தக் குறையைப் போக்குவதற்கு முயன்ற சிறந்த அறிஞர்களுக்குள்ளே திரு பி.எஸ். ராமையா அவர்கள் குறிப்பிடத் தகுந்தவர். போக்குவதற்கு முயன்றார் என்று சொன்னேன், ஆனால் போக்கிவிட இல்லையென்றுதான், இந்த எழுத்தாளர்களைப் பார்த்து நான் சொல்லிக் கொள்ளுகின்றேன். ஏன், அவர்கள் தங்களாலான முயற்சி செய்தார்கள். இன்னும் பல நாடகக் கலைஞர்களைப் படைத்து இருக்க வேண்டாமா ? இன்னும் அவர்களையொட்டி பலர் எழுதியிருக்க வேண்டாமா ? திரு பி. எஸ். ராமையா அவர்கள் மேற்கொண்ட முயற்சியை மேற்கொண்டு இன்னும் பலர் எழுதியிருந்தால் உண்மையிலேயே போக்கி இருக்க முடியும். ஆனால் ஒரு சிலர்தான் நாடகத்துறைக்கு வந்தார்கள். நான் சிலரைப் பார்த்துக் கேட்டேன்; ஏன் நீங்கள் இன்னும் நாடகம் தொடர்ந்து எழுதக்கூடாது என்று எழுதினவர்களைப் பார்த்துக் கேட்டேன். அவர்கள் திருப்பி எனக்குச் சொன்னார்கள். அதற்கு மேலே நான் பேசமுடியாமல் பதில் சொல்லிவிட்டார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் ? 'நான் எழுதுகிறேன், யார் அச்சுப் போடுவது' என்றார்கள். சில நாடகங்கள் எழுதி வெளியிட்ட ஒருவரே என்னிடம் சொன்னார், ''யாராவது அச்சுப் போடுகிறவர்கள் இருந்தால் பார்த்துச் சொல்லுங்கள் நான் எழுதித்தருகிறேன்'' என்று. எழுதிய நாடகத்தை வைத்துக் கொண்டே சிலர் திகைத்துக் கொண்டி

ருந்தார்கள். சரி, நாடகம் எழுதுகின்றவர்கள் சொல்கின்ற இந்த ஒரு தடையை வைத்துக் கொண்டு, அச்சுப்போடுகிறவர்கள் இரண்டு பேரிடம் கேட்டேன். இரண்டு பேரும் இங்கே இல்லே. ஒருவர் சக்தி, இன்னொருவர் பாரி இரண்டு பேரிடத்திலும் கேட்டேன். நாடகம் அச்சுப்போடுவது உங்களுக்குக் கசப்பா என்று. அவர்களும் சரியானபடி பதில் சொல்ல இல்லே.

நாடகக் கலேக்கு இருக்கின்ற ஆற்றல் மிகப் பெரிய ஆற்றல். நாடகம் ஆற்றல் மிருந்த ஒரு கலே. அதைப் பற்றி திரும்பத் திரும்ப பலமேடைகளிலே கேள்விப்பட்டிருப்பீர்கள். சிறந்த பெரியார்களுடைய வாழ்க்கையை மாற்றுவதற்கு நாடகம் காரணமாய் இருந்தது. நம்முடைய நூற்றுண்டிலே வாழ்ந்த சிறந்த சான்றோர் காந்தியடிகள் வாழ்க்கையை மாற்றியது, ஹரிச்சந்திர நாடகம் என்று நாம் அறியும் போது, நாடகத்தின் பெருமையை நாம் நன்ருக உணருகின்ரும். எல்லோரும் பார்க்கக் கூடாது, இந்த நாடகத்துக்குப் போகக் கூடாது என்றெல்லாம் பெற்ருேர்கள் தடுக்கக்கூடிய அளவுக்கு அந்தக் கலேக்கு ஒரு தாழ்வு ஏற்பட்டிருந்தது முன்பு. அந்தத் தாழ்வு அடியோடு இன்று போய்விட்டது. இன்று தாய் மார்கள் எல்லாம் நாடகம் பார்க்க விரும்புகின்ருர்கள். இன்று குடும்பங்களில் போக வேண்டுமென்று விரும்புகின்ற குழந்தைகளுக்கு தடைதான் இருக்கின்றது. 'ஒன்லி பார் அடல்ஸ்' என்று அந்த அளவுக்கு திரைப்பட உலகம் அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. ஆகவே இனிமேல் போகக்கூடாது, அதைப் பார்க்கக்கூடாது என்று பெற்ருேர்கள் சொல்லுகின்ற நிலேயில் இல்லே. நாம் ஏன் வீணுக வெல்ல முடியாத ஒன்றை பகையாக்கிக் கொண்டு அல்லல் படவேண்டும்? ஒரு வேளே அதை வென்று ஒழிக்க முடியுமானுல் பார்க்கலாம், இனிமேல் முடியவே முடியாது, நம்மாலே வெல்ல முடியாது. அதை எந்த வகையிலும் அடக்க முடியாது.

அரசனுடைய செல்வாக்கைப் பெற்றுக் கொண்டு, பார்லிமென்ட் சட்டத்தை வைத்துக் கொண்டு இங்கிலாந்திலே. அதை அடக்கப்பார்த்தார்கள் அவர்கள். இந்த நாட்டிலே கூட, கொஞ்ச காலம் பல்லவர்கள், சோழர்கள் காலத்திலே அவர்கள் செல்வாக்கை வைத்துக்கொண்டு நாடகக் கலேயையெல்லாம் தடுக்கப் பார்த்தார்கள். ஒரு அளவுதான் முடிந்ததே தவிர அதற்கு மேல் முடியவில்லே. கண்ணுக்கும், செவிக்கும் விருந்தளிக்கக்கூடிய கலேகளே உலகத்தில் யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது. ஆகையால் அப்படிப்பட்ட ஆற்றல் மிகுந்த ஒரு கலேயை நாம் பகையாகவோ, எதிரியாகவோ ஆக்கிக் கொள்ளுவதைவிட்டு, இந்த நாட்டுக்கு, உதவி செய்யக் கூடிய கலேயாக அதை ஆக்கி நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த முறையிலே நாடகக் கலேயைப்பற்றி பலவிதமான கருத்துக்களே ஆராய இன்று இருக்கின்ரும். நாடகத்திலே படைக்கப் பட வேண்டிய தலேவன், தலேவி எல்லாம் பழங் காலத்தைப் போல ராஜாக்கள்தான் இருக்க வேண்டுமா என்ற சர்ச்சை இன்று தேவையில்லே, இன்று சமூக நாடகங்களுக்கு செல்வாக்கு மிகுந்து விட்டது. வில்லன்கள் எல்லாம் அப்படித்தான் இருக்க வேண்டுமா என்பதிலே மட்டும் கொஞ்சம் வேண்டுமானுல் ஆராயலாம். பழங்காலத்து வில்லன்களேப் போல கொடியவர்களாக முகத்தைப் பார்த்தாலே கொடுமை உடையவர்களாக அல்லது அவர்கள் செய்கைகளிலே ஆற்றல் மிகுந்தவர்களாக இருக்கத் தேவையில்லே, எண்ணத்திலே பேச்சிலே உணர்ச்சி சூழ்ச்சி உள்ளவர்களாக இருந்தாலும் கூட போதும். அப்படிப்பட்ட வில்லன்களே எல்லாம் இப்போது படைக்கவேண்டும்,

இந்தக் காலத்திலே வாழ்க்கையை கெடுப்பவர்கள் யார், யார், எப்படியெப்படி கெடுக்கிருர்கள் என்றெல்லாம் பார்த்து, அப்படிப்பட்ட வில்லன்களேயெல்லாம் கொடியவர்களேயெல்லாம் படைத்துக் காட்டவேண்டும். சமூக நாடகங்களிலே அப்பேர்பட்டவர்களேப் படைத்திருக்கின்ருர்கள். சிறந்த முறையிலே பழங்காலத்து கதையிலே மாதர்கள் புராண மாதர்கள் அவர்களேயெல்லாம் வைத்துப் படைக்கலாம். 'தேரோட்டி மகன்' நீங்கள் அனேவரும் பார்த்திருப்பீர்கள். என்ன அருமையான படைப்பு! எல்லோருக்கும் தெரிந்த பாத்திரங்கள்தான். கர்ணன், துரியோதனன், அவனுடைய மனேவி பானுமதி, இந்தப் பாத்திரங்கள் எல்லாம் தெரிந்தவர்கள்தான். ஒன்றும் புதியதல்ல. ஆனுலும் தேரோட்டி மகனேப் பார்க்கும்போது ஒரு புத்துணர்ச்சி யோடு நாம் திரும்பிவருகின்ரும். புதிய ஒரு உணர்ச்சி ஏற படுகின்றது. இந்தக் காலத்தேயும் உள்ள ஒரு மாசு அந்த நாடகத்திலே சுட்டிக் காட்டப்படுகின்றது. நெஞ்சிலே உருத்தும் வகையிலே எடுத்துக் காட்டப்படுகின்றது. கர்ணனுக்கு அவ்வளவு ஆற்றல் இருந்துங்கூட, அவ்வளவுசிறப்பெல்லாம் இருந்தும் கூட, பாரதக் கதையிலே விளங்காத அந்த அளவுக்கு பாரதக் கதையிலே ஆற்றலுடன் உணர்த்தப்படாத அந்த அளவுக்கு, இந்தக் கதையிலே உணர்த்தப் படுகின்றது, அந்த மாசு. அவ்வளவு சிறப்புஎல்லாம் இருந்தும் கூட, நாடாளும் சக்கரவர்த்தியால் போற்றப்படும் அந்த அளவுக்கு பெரும் மதிப்பு இருந்தும் கூட, சக்கரவர்த்தியே போற்றக் கூடிய கர்ணன் என்று மதிக்கக்கூடிய அந்த அளவுக்கு பெருமதிப்பு பெற்றவனுக இருந்தும் கூட, அவனுடைய மனேவியாலே மதிக்கப் படவில்லே. தேரோட்டி மகனேப் பார்க்கும் போது, அந்த எழுத்துதிறன் என்ன அருமையாக உணர்த்துகின்றது! புலப்படுத்துகின்றது, கடைசியில் தான் நமக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது, இவ்வளவு புறக்கணிக்கின்ருளே. என்ன கொடுமை, என்ன கொடுமை என்ற எண்ணம் வருகிறது. அவளுடைய புறக்கணிப்பை யெல்லாம் மாற்றுவதற்கு பானுமதி செய்கின்ற பெரிய முயற்சிகள் எல்லாம் வீணுகப் போகின்றன. நெஞ்சத்திலே அன்பு இருந்தும் கூட, தனக்கு வாய்த்த கணவன், உண்மையாகவே இணையற்ற வில் வீரன் என்று இருந்தும் கூட,

தனக்கு வாய்ந்த கணவன், இந்த நாட்டின் சக்ரவர்த்தியாலே போற்றுகின்ற ஒரு தலைவன் என்று இருந்தும்கூட தனக்கு வாய்த்த கணவன் அழகிலோ, மற்றத் துறையிலோ சிறிதும் குறைந்தவன் அல்லன் என்று தெரிந்திருந்தும்கூட, அவன் க்ஷத்திரியன் அல்லவே என்ற ஒரே ஒரு எண்ணம் உள்ளத்திலே இருந்துகொண்டு, அவளை என்னவோ படுத்துகின்றது. அவளுடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய வீழ்ச்சிக்குக் காரணமாய் இருக்கிறது. இதுசமுதாயத்தில் இருந்த ஒரு மாசு. இத்தகைய மாசு பற்றி எடுத்துரைத்து அம்பலப் படுத்த நாடகங்களைப் போல் ஆற்றலுள்ள கருவி வேறு இல்லை.

இவ்வளவு சிறப்பும் ஆற்றலும் உள்ள நாடகத்தை இலக்கியத் துறையில் வளர்த்துப் போற்ற வேண்டியது எழுத்தாளர்களின் கடமையாகும். தரமான நல்ல நாடகங்களைத் தமிழ்மொழி பெற வேண்டும். பழம் பெருமைகளைப் பேசுவது மட்டும் போதாது. தமிழுக்கு புதுச் செல்வங்களை வளர்த்துத் தந்து பெருமைப்படுத்த வேண்டும். கவிதை நாடகங்களும். உரைநடை நாடகங்களும் பற்பல வேண்டும். ஓரங்கநாடகங்களும் பற்பல வேண்டும். இன்று நாடகங்கள் தமிழில் இல்லாமல் போகவில்லை. ஆனால் அவை போதா. இலக்கியம் என்று போற்றத்தக்க—உணர்ச்சியும் கற்பனைகளும் நிரம்பிய—கலைச் சிறப்பு உடைய நாடகங்களைத் தமிழ் எழுத்தாளர்கள் படைத்துத் தரவேண்டும். ஷேக்ஸ்பியர் இப்சென், தாகூர் படைத்த நாடகங்களின்-தரத்தில் வைத்து எண்ணத்தக்க நல்ல படைப்புகளைத் தமிழ் மொழி பெறவேண்டும். அதற்கு உரிய ஊக்கம் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

# அன்று சொன்னது இன்றைக்கும்—

## தொட்டாச்சுருங்கி மனப்பான்மை

இலக்கியச் சுவையறியும் திறமை உலகில் சிலருக்குத்தான் உண்டு. மேலும் தாம் அறிந்தவைகளைப்பற்றி அபிப்ராயம் கூறும் திறனுடையார் வெகுவெகுக் குறைவு. 'வாய் முத்தை உதிர்க்க அசிரத்தைப் பட்டுக்கொண்டு' சபாஷ் என்றோ 'நன்றாயில்லை' என்றோ ஒரே வார்த்தையில் அபிப்ராயம் கூறுகின்றவர்களும் உண்டு, இந்தக் கூட்டத்தின் நடுவில் வசித்து புதிய ஆசிரியன் வளர்ச்சியடைய வேண்டியிருக்கிறது.

விமர்சனங்களை ஏற்றுக்கொள்வதற்கு அத்யாவசயமான சகிப்புத்தன்மை ஒவ்வொரு புது ஆசிரியனுக்கும் இருக்கவேண்டும். இனிமேல் உலகமே விமர்சன உலகம்தான். திறமையையெல்லாம் தராசில் வைத்து நிறுப்பது போல அபிப்ராயம் கூறுகிறவர்கள் எல்லாத்துறைகளிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொட்டாச் சுருங்கிகளாக வித்வான்கள் இருந்து பயனில்லை. புகழுரைகளையும் கண்டனங்களையும் ஏற்றுக்கொள்ள திராணியும் தைர்யமும் இருக்கத்தான் வேண்டும்,

ஆனால் இலக்கிய உலகத்தில் தடியடிப் பேர்வழிகள் சிலர் ஏற்படுவதுண்டு. தமிழ் நாட்டில் பிள்ளைப் பாண்டியன் ஆசிரியர்களின் தலையில் குட்டி அவமானம் செய்து வந்தானும். இளம் ஆசிரியர்களின் காதுகளை வில்லி என்பான் அறுத்து வந்தானும். இந்தமாதிரி அநாகரிக முறையில் தன்டனை தரும் விமர்சகர்கள் இனி இலக்கிய உலகில் ஏற்படமாட்டார்கள். ஆயினும் விமர்சனம் எழுதும்போது இளம் ஆசிரியர்கள் மனம் அதிகமாகப் புண்படாது எழுத வேண்டியது மதிப்புரையாளர் கடமை.

சங்கு. ஸுப்ரமண்யன்,
(ஆசிரியர் பேச்சு சுதந்திரச்சங்கு —1934)

## போலி மதிப்புரைகள்

புஸ்தகம் விலை கொடுத்து வாங்கிப்படிக்கும் பழக்கம் இப்பொழுதுதான் சிறிது சிறிதாக வளர்ந்து வருகிறது இச்சமயத்தில் இப்படிப்பட்ட மதிப்புரைகள் ஓர் தவறான அல்லது போலி ரசனையை ஏற்படுத்தி வருகின்றன, அது மட்டுமல்ல. போலி மதிப்புரை இருபக்கங்களிலும் கூரான கத்தி. தானே நிர்ணயித்துக் கொள்ளும் வாசகரை நிரந்தரமாக அசட்டுத்தனத்துக்கு உள்ளாக்குவதுடன் எழுதிய ஆசிரியரையும் ஒரு போலித் தன்னம்பிக்கையுடன் கூடிய அகந்தையைக் கொடுத்தும் பாழாக்கி விடுகிறது.

மதிப்புரைகள் விஷயத்தில் இப்படிப்பட்ட அபேதவாதம் ஒரு நிரந்தரமான கெடுதலை விளைவிக்கிறது இப்பொழுதுதான் புஸ்தகம் வாங்கிப் படிக்கும் படிக்கும் பழக்கம் ஏற்பட்டு வருகிறது. இவர்கள் அடிக்கடி ஏமாற்றப்பட்டால் அவர்களுக்கு உற்சாகம் குன்றிவிடும் அல்லது அவர்களது உற்சாகம் எல்லாம் அசட்டுத்தனங்களைக் கட்டி மாரடிக்கும் ஓர் விபரீத நிலையில் அவர்களைப் புகுத்தி விடும்.

மதிப்புரை எழுதுவோர் கொஞ்சம் ரண வைத்தியரின் மனப்பான்மையைக் கொண்டிருப்பதால், உண்மையிலேயே சக்தி ஏற்ற இலக்கிய கர்த்தர்களை சாகடித்து விடமுடியாது. இதற்கு பாரதியார் ஓர் சிறந்த உதாரணம் மேலும் பாரதியார் அசட்டை செய்யப்பட்டதற்கும் இந்த போலி மதிப்புரை தான் காரணம்.

புதுமைப்பித்தன்
(மணிக்கொடி 'யாத்ரா மார்க்கம்' பகுதியில் 1937)

சிறுகதை

# மானம் காத்த மாஷாணம்

## ந. சிதம்பர சுப்ரமண்யன்

கோடை இடி கோபாலகிருஷ்ணன் என்றால் எல்லோருக்கும் தெரியும். பாரதி பாடல்கள் இன்று எல்லோருக்கும் அறிமுகமாயிருக்கிறதென்றால் அதில் பெரும் பங்கு கோபாலகிருஷ்ணனுக்குத் தான் உரியது. பட்டமரம் துளிர்க்கும் என்பார்களே. அது போல உணர்ச்சியே இல்லாத மனிதர்களைக்கூட அவர் உணர்ச்சி பொங்கச் செய்திடுவார் பாட ஆரம்பித்து விட்டால் கோவில் மணியின் வெங்கல நாதத்தைக்கொண்ட அவர் குரல் இதயத்தை பொங்கி எழச் செய்யும்.

'வெடிபடு மண்டத்திடி தாளம்போட' என்ற சக்திக் கூத்தை அவர் பாட ஆரம்பித்துவிட்டால், மின்னலும், இடியும், மழையும், காற்றும் இருளும் ஒளியும் சேர்ந்து நர்த்தனம் செய்யும் ஒரு பிரளய தாண்டவமே நம் மனத்தின் முன் எழும். வேட்டு வெடிப்பது போன்ற பாட்டுக்களைத் தவிர மனத்தையும் இதயத்தையும் கசிய வைக்கும் பாட்டுகளும் அவர் பாடுவார்.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் ?
சர்வேசா இவ்வுயிரைக்
கண்ணீராற் காத் தோம் ;
கருகத் திருவுளமோ ?

என்ற பாட்டை அவர் பாடும்பொழுது, இதயத்தில் உள்ள சோக மெல்லாம் கண்ணீராகி, தண்ணீராகத் தாரை தாரையாகக் கொட்டும் படிச் செய்யும் மந்திரத்தையும் அவர் அறிந்து வைத்திருந்தார்.

நான் முதன் முதலாக அவருடன் பழக நேர்ந்தது 1930ம் வருஷத்தில், சுதந்திர இயக்கம் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருந்த காலம் அது. என்னைப்போன்ற இளைஞர்களுக்கு தேசிய வெறி முற்றி இருந்த காலம் அது. அந்தக் காலத்தில் தம்பு செட்டி தெருவில் கோபாலகிருஷ்ணன் இலவசமாக பாரதி வகுப்பு நடத்திக்கொண்டிருந்தார். அந்த வகுப்பில் நான் மாணவனாகச் சேர்ந்து கொண்டேன். அப்பொழுது எனக்கு வயது இருபது. என் குரலில் ஒரு இனிமை இருந்தது. ஆனால் 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்' என்ற பாட்டுப் பாட ஆரம்பித்தால் என்ன காரணத்தாலோ என்குரல் தழதழக்கும். கண் கலங்கும். பாட்டை படிக்காமலேயே நிறுத்திவிடுவேன்.

என்னுடன் சோமநாதன் என்ற தேசபக்தரும் பாடம் கேட்டு வந்தார். அவர் வயதிலே என்னைவிட மிகவும் மூத்தவர். அவருக்கு வயது சுமார் நாற்பத்தைந்துக்குக் குறையாமலிருக்கும். இரண்டு மூன்றுதரம் சிறை சென்றவர் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டு பலவித இன்னல்களை ஏற்று மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து அவர் பல சுவையான விஷயங்களைச் சொல்லுவதில் வல்லவர். பத்திரிகை யொன்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் சொன்னார். ''என்னப்பா உன்னை இந்தப் பாட்டு மிகவும் உருக்கி விடுகிறதுபோலிருக்கிறதே !''

"ஆமாம், இந்தப் பாட்டைப் பாட ஆரம்பித்தால் என் நெஞ்சு கலங்கிறது.!"

''இந்தப் பாட்டிற்கு ஆதாரமான விஷயங்களை அறிந்து கொண்டாயானால், நீ என்ன செய்வாயோ ?''

''என்ன அந்த அரிய விஷயங்கள் ?''

"மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ ?"

என்று சொல்கிறாரே: ''நூலோர்கள்'' என்று சொல்லுவது வ. உ. சிதம்பரம் பிள்ளை கடலூர்ச் சிறையில் செக்கிழுத்த அந்தக் கொடுமையான விஷயத்தைத்தான். அதைச் சொல்லுவதால் தான் பாரதியின் நெஞ்சும் துடி துடிக்கிறது. அந்தத் துடிதுடிப்புத்தான் நம்மையும் கலக்கி விடுகிறது

''வ. உ. சி. செக்கிழுத்தாரா ''?

''ஆமாம். அவரைப் போன்ற தேசபக்தர்களும், பெரியவர்களும், செக்கிழுத்தார்கள். மாட்டைப் பூட்டி கட்டுவதற்குப்பதிலாக, மனிதர்களை, இல்லை இல்லை, மகான்களைப் பூட்டிச் செக் கிழுக்கச் செய்தான் இந்த பிரிட்டிஷ்காரன். இதைக் கண்டு பொறுக்காத பாரத தேவியின் கண்ணீர் தான் நம் சுதந்திரப் பயிரை இன்று வளர்த்துக் கொண்டு வருகிறது. அதனால் தான் இன்று தேச பக்தி இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது.'' என்றார்.

நான் அதிர்ந்துபோய் நின்றேன். தேசத்திற்காக எல்லாவற்றையும் துறந்து தவமுனிவர்கள் போன்று நின்ற பெரியார்களை விலங்குகளைப் போல் நடத்துவது என்றால் அது சாதாரணமான செயலா ?

"இப்படியும் நடந்திருக்க முடியுமா என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே,''

''இது நம்பமுடியாத விஷயந்தான். நானும் நேரிலேயே பார்த்திருக்காவிட்டால் நம்பியிருக்க மாட்டேன்!''

''என்ன அநியாயம்! அரசியல் கைதிகளுக்குக் கொடுக்கும் தண்டனையா இது? அதுவும் மேல் நாட்டு நாகரிகத்தில் சிறந்து விளங்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுக்கும் தண்டனையாகஇல்லையே. ஏதோ காட்டு மிராண்டி அரசாங்கம்கொடுக்கும் மிருகத்தனமான தண்டனையாகவல்லவோ இருக்கிறது என்று ஆத்திரத்துடன் பேசினேன்.

"நல்லவர்களை கொடுமைப்படுத்துவது என்பது ராக்ஷஸ ராஜரிகத்தின் ஒரு முக்கியமான அங்கம், அந்தக் கொடுமை ஏற ஏற அரசாங்கத்தின் முடிவு சுருங்கிக் கொண்டேவரும் என்பதும் உலக நியதி, அந்த விதத்தில் இதுவும் ஒருவிதத்தில் நன்மைக்கு தான்,

''சரி இந்த விதமான கொடிய தண்டனை எப்படி நின்றது. அரசாங்கமே இதன் கொடுமையை அறிந்து நிறுத்திவிட்டதா அல்லது மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டதால் நிறுத்தி விட்டதா''

"அதுவா, அதுஒருகதை-இந்தக் கொடுமைக்கு முடிவுகட்டியவன் மாஷாணத்தேவன். ஆம் அவன் ஒரு சாதாரணக் கைதிதான். இருந்தாலும் தேசத்துக்காக உயிரைக்கொடுத்த பெரும் தியாகிகளின் வரிசையில் சேர்க்கப்படவேண்டியவன், விடுதலைக்காகச் செயற்கரிய செயலைச் செய்த மாவீரரில் ஒருவனுகச் சேர்க்கப்படவேண்டியவன். மனிதனுக்கு மானம்போகாமல் காப்பாற்றிய மகா தியாகி அவன்,'

'அந்த மகானுபாவன் யார். அவர் என்ன செய்தார்? எதற்காகச் சிறைசென்ருர்? எப்படி அவரால் இந்தக் கொடுமையை நிவர்த்தி செய்ய முடிந்தது. கொஞ்சம் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும்,'

'மாஷாணத் தேவன் ஒரு விவசாயி. நில புலங்கள் வசதியாகக் கொண்டவன், அவன் கிராமத்திலேயும் சரி, சுற்று வட்டாரத்திலேயும் சரி, நல்ல செல்வாக்கு. பார்த்தாலே எதிராளி மரியாதை செய்யும்படியான கம்பீரமான தோற்றம். வாட்ட சாட்டமான கிட்டத்தட்ட ஆறடி உயரம் இருக்கும் அவன் சரீரம். உயரத்துக்குப் பொருத்தமான பருமன். நல்ல நாவல்பழக்கருப்பு. இரண்டு பக்கமும் கைப் பருமனுக்கு கால் அடி நீளமுள்ள முறட்டு மீசை. புத்த விக்ரகங்களில் செதுக்கியிருப்பது போன்ற சுருட்டை சுருட்டையான தலைமயிர். பருந்துப் பார்வை கொண்ட கண்கள். முகத்திலே எப்பொழுதும் சிரிப்பு. இதயத்திலே எல்லோரிடமும் பாய்ந்து செல்லும் அன்பு.'

'அடேடே, அப்படிப்பட்ட மனிதன் சிறைக்கு வந்து சேர்வானேன்?'

'விதி யாரை விட்டது. விவசாயி என்று சொன்னேனல்லவா அதுவும்அந்தவட்டாரத்திலே முக்யமான புள்ளி. வேண்டியவர்கள் இருப்பார்கள்-வேண்டாதவர்கள் அதற்கு மேல் இருப்பார்கள், வலுச்சண்டைக்கு இழுத்துத் தொந்தரவு கொடுக்கவேண்டும் என்று கூட சில காரியங்கள் செய்வார்கள். கிராமங்களிலே அது சகஜம். மாஷாணத்தின் நிலத்திலே நீர்பாய்ச்சிக் கொண்டிருக்கும்பொழுது, அதை மறித்து தன் நிலத்திற்குப் பாய்ச்சிக்கொண்டுவிட்டான் இவனிடம் பகைமை கொண்ட பக்கத்து நிலத்துக்காரன். மாஷாணம் முன்கோபக்காரன். ரொம்ப ரோசக்காரன். இதைத் தன்னை அவமதிக்கவே இப்படிச் செய்திருக்கிறுன் என்று மிகவும் கோபம்அடைந்து விட்டான். ஏற்கனவே இருந்த மனஸ்தாபத்திஞல், வார்த்தைகள் தடித்து, கைகலப்பு ஏற்பட்டு கையிலிருந்த தடிக்கம்பிஞல், எதிரியின் மண்டையிலே நல்லபோடு போட்டு விட்டான் மாஷாணம் நல்லவேளை. எதிரி சாகவில்லை. ஆஞலும் அந்த மனிதன் ஆஸ்பத்திரியிலிருந்து வருவதற்கு ஆறு மாத காலம் ஆயிற்று. போலீஸ் மாஷாணத்தின் மேல் நடவடிக்கை எடுத்து, குற்றம் ருசுவாகி, கைது செய்யப்பட்டு சிறைக்கு வந்து சேர்ந்தான்.

'கிராமச் சூழ்நிலையிலே, இவை அபூர்வமான காரியங்கள் அல்ல. 'கோபம், பாபம், சண்டாளம்' என்பார்கள். ஏன் இவர் இவ்வளவு தூரம் கோபத்திற்கு இடம் கொடுத்து இந்த அவஸ்தையில் மாட்டிக் கொள்ளவேண்டும்?

'தனக்கு நஷ்டம் ஏற்பட்டது என்பதற்காக ஆத்திரப்படவில்லை. அயலான் அக்ரமம் செய்கிறுன் நியாய விரோதமாகச் செய்கிறுன் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்ற மனப்பான்மையில் இந்தச் சண்டையில் மாட்டி கொண்டான்'

'பாவம் நியாயம் தர்மம் இவைகளுக்குக் கட்டுப்பட்டு அதைப் போற்றும் பண்பு கொண்டவர் போலிருக்கிறது.'

'ஆம், நல்ல பண்பு படைத்த உள்ளம் பிறர் நோகச் சகிக்கமாட்டான். சிறுமையான காரியங்களைக் கண்டால் சீறி விழுவான். தவருக ஏதாவது நடந்துவிட்டால் அதைக் கண்டிப்பது தன் பொறுப்பு என்று நினைத்து ஏதாவது செய்ய ஆரம்பித்து விடுவான். அதுமாதிரி நேர்ந்தது தான் இது.'

'அவன் அதிகமாகப் படிக்காவிட்டாலும், அரசியல் விஷயங்களில் அதிகமான ஈடுபாடு இல்லாமலிருந்த போதிலும், அரசியல் கைதிகளுடன் பழக ஆரம்பித்ததிலிருந்து அரசியலிலும் ஒரு புது ஆர்

வம் காட்ட ஆரம்பித்தான். அந்தக் காலத்தில் அரசியல் கைதிகளுக்கும், சாதா கைதிகளுக்கும் பாகுபாடு கிடையாது கலந்து தான் இருந்தோம். நான் அவனுக்கு உலக சரித்திரத்தில் ஏற்பட்ட முக்யமான போராட்டங்களைப் பற்றியும், தேச விடுதலைக்காகப் பாடுபட்ட புரட்சி வீரர்களைப் பற்றியும் அநேக விஷயங்கள் சொல்லுவேன். மிகவும் சுவாரஸ்யமாகக் கேட்டு, மனத்தில் கிர கித்துக் கொள்வான், ஆகவே என்னிடம் அவனுக்கு மிகுந்த அன்பு.'

'குருபக்தி,'

'இல்லை அன்புதான் அவனுக்கு அளவிறந்த பக்தி வ. உ. சி.யிடம் தான். அவரிடம் ஆண்டவனிடம் காட்டும் பக்தியைக் காட்டி வந்தான். சாதாரணமாக செக்கிழுப்பதற்கு மனிதனைப் பூட்டுவது மிகவும் அவனுக்கு அருவருப்பாயிருந் தது. மனிதனை மாட்டைப்போல நடத்துவதாவது என்பதுதான் அவனுடைய ஆக்ரோஷத்திற்குக் காரணம். அதுவும் கடவுளைப்போன்று போற்றப் படும் வ. உ சி. யைச் செக்கிழுக்கச் செய்தது அவனால் சகிக்க முடியாமல் இருந்தது. தனக்குள்ளேயே பொறுமிக் கொண்டிருப்பான் அரசாங்கத்தையும் அதிகாரிகளையும் வைது முணுமுணுத்துக் கொண்டிருப்பான். 'வெளியே நான் போகவிட்டு இவர்களை என்ன பாடுபடுத்துகிறேன் பாருங்கள்' என்று சவால் விடுவான். 'என்னப்பா, இவர்கள் என்ன செய்வார்கள்? இவர்களுக்கும் வ. உ. சி.க் கும் சொந்த மனஸ்தாபமா? இதெல்லாம் அதிகார வர்க்கத்தின் செயல்கள். தனிமனிதனுக்கும், தனி மனிதனுக்கும் ஏற்படும் விவகாரமில்லையே' என்று சமாதானப்படுத்துவேன்.

ஆனால், மாஷாணம் இந்த சமாதானங்களை ஏற்றுக் கொள்ளவே யில்லை. 'ஆண்பிள்ளை சிங்கம்! அதை மாட்டைப்போல செக்கிலே பூட்டறதா, நாளைக்குக் கலப்பையிலே மாட்டி உழச்சொல்லு வான் பிறகு வண்டியைக் கட்டி இழுக்கச்செய் வான். (மாஷாணம் சென்னை நகரம் வந்ததில்லை) என்று அவன் மனம் கொந்தளிக்கும். மனிதன் செய்யத் தகாத ஒரு கேவலமான காரியத்தைச் செய்யச் சொல்லி அரசாங்கம் அவமானப்படுத்து கிறதே என்று அவன் கொதித்தான், அண்ணே! (என்னை அப்படித்தான் அருமையாக அழைப் பான்) நான் உயிரோடிருக்கும் வரையில் அந்த மகானைச் செக்கிழுக்க விடமாட்டேன்' என்று வீர சபதம் போட்டான்.

'இதோ பார்! மாஷாணம் அப்படியெல்லாம் வீறாப்புப் பேசாதே. கல்லுப் பிள்ளையார் தலையிலே குட்டினால், நமக்குத் தான் கைவலிக்கும். அரசாங் கம் உணர்ச்சியற்ற ஜடப்பொருள். அதிலே போய் தனிமனிதன் என்ன செய்ய முடியும்?'

'என்ன அண்ணே? அப்படிச் சொல்லிப் பிட்டிங்க, இவ்வளவு நாள் எனக்குப் போதிக்க வில்லையா? எத்தனை வீரர்கள் அரசாங்கத்தைக் கவிழ்த்திருக்கிறார்கள். அவர்கள் தனி மனிதனாக வே தானே உயிரில்லாத அரசாங்கத்தோடு போ ரிட்டிருக்கிறார்கள். அவர்கள் செய்த அரிய செயல் களினால்தானே உலக சரித்திரமே மாறிவிட்டிருக் கிறது.'

'பலே மாஷாணம்! குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாகிவிட்டாயே, கற்றவித்தையை குருவிடமே காட்டுகிறாயே பரவாயில்லை. நீ சொல்வது உண் மைதான், நான் சொல்லவந்தது விவரம் தெரியா மல் முரட்டுத்தனமாக எதையாவது செய்துவிட்டு வீண் சங்கடத்தில் மாட்டிக்கொள்ளாதே.' என் றேன் 'நீங்க சும்மா இருங்க, நான் பாத்துக்கிறேன் இதற்கு ஒரு வழி செய்தாகவேணும்' என்றான் மாஷாணம்.

நாலு நாட்கள் கழித்து வ.உ. சியை செக்கை நோக்கி அழைத்துச்சென்றான் சிறை வார்டன். நாங்கள் எல்லோரும் வரிசையாக நின்றுகொண்டி ருந்தோம் மாஷாணம் குறுக்கே விழுந்தடித்து ஓடி 'வார்டனை வழிமறிப்பதுபோல 'ஐயா நில்லுங்கள்' என்று நின்றான். 'சீ. நாயே வழியை விட்டு நில்'

---

# மறுபிறப்பு

தி. சோ. வேணுகோபாலன்

கல்லும் களிமண்ணும்
கனக நடைபோட
கறுப்பாயி, பச்சை, சிவப்பாயி
ரகம் எல்லாம்
அகங்காரக் கடைபோட
முத்து நகைக்காரி
முடங்கிப் பதுங்க
............ ........
பதினைந் தாண்டுகள்
பதுங்கி யிருந்த
'நாரணன்' ஆசை
நித்திரை நீங்கி
நெளிந்தது !
........
கண்ணிமைப் பொழுதில்
குபேரனாய் மாற்றும்
தொழிலுக்குக்
காலனாய் வந்த
பாட்டன்,
இன்னும் படுக்காத
காரணத்தால்
பட்டி தொட்டி
எல்லாம்
படியளந்த விக்கிரமன்
பட்டணத்தில்
மட்டும்
புகுந்தானே
வாமனனாய் ?

என்று கையிலிருந்த கழியால் மண்டையிலேபோட்டான் வார்டன். 'சீ நாயே என்று சொல்கிறாயா! என்று வார்டன் குறவனேயைப் பிடித்துத் தள்ளப் போனான். மாஷாணம். இதற்குள் மற்றவர்கள் சேர்ந்து வார்டனை விடுவித்து மாஷாணத்தைக்கட்டிப்போட்டுஉரிய தண்டனைகொடுத்தார்கள். தண்டனை என்ன!கசையடி. இரும்புமுள்வைத்த சவுக்கினால் ரத்தம் வீறிட்டடிக்க நையப்புடைத்தார்கள், மலஜலம் கலந்த தண்ணீரை, வாயிலும் முகத்திலும் வாரி அடித்தார்கள். அப்பப்பா ஒன்றல்ல இரண்டல்ல, ஒருநாள் அல்ல, வாயினால் சொல்லவே கூசுகிறது அவ்வளவு பயங்கரமான, அருவருப்படையும்படியான தண்டனைகளைக் கொடுத்தார்கள். மாஷாணத்தின் உடல் தளர்ந்தது. ஆனால் உள்ளம் என்னவோ தளரவில்லை. ராட்சதன் போன்று இருந்த அவன் உடல் மெலிந்து நோய்வாய்ப்பட்டவனதுபோல் ஆகிவிட்டது.

மறு தடவை வ. உ. சி க்குச் செக்கிழுக்கும் முறை வரும்பொழுது, மற்றும் ஒரு விபரீதம் ஏற்படாமல் இருக்கவேண்டுமே, நான் பயந்துகொண்டிருந்தேன். ''மாஷாணம் தெரிந்து கொண்டாயா? நீ செய்த காரியத்தின் பலன் என்ன? மறுபடியும் ஏதாவது கலாட்டா பண்ணி வைக்காதே. அப்படிச் செய்தாயானால், உனக்குக் கொடுக்கும் தண்டனை முந்தியவைகளைவிடப் பன்மடங்கு பயங்கரமாயிருக்கும்' என்று ஜாக்ரதைப் படுத்தினேன்.

'தெரிஞ்சுகிட்டேன் அண்ணே' என்றான் மாஷாணம். ஆனால், இரண்டு நாட்கழித்து, வார்டன் வ.உ.சி. அவர்களைச் செக்கிற்கு அழைத்துச் செல்லும்பொழுது மாஷாணம் மறுபடியும் குறுக்கே போய நின்றான். என் நெஞ்சம் பகீரென்றது. 'படுபாவி,மறுபடியும் துன்பத்திற்குள்ளாகப் போகிறானே' என்று வேதனைப் பட்டேன். ஆனால், மாஷாணம் நடந்துகொண்ட விதம் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. கையைக் கூப்பிக்கொண்டு அவனிடம் காணமுடியாத வினயத்துடன், வார்டரிடம் 'ஐயா அவரை விட்டு விடுங்கள். அவருக்குப் பதிலாக நான் இழுக்கிறேன்' என்று கெஞ்சினான். வார்டன் ஒரு விநாடி யோசித்து விட்டு 'சரி வா,' என்று மாஷாணத்தைச் செக்கிற்கு அழைத்துச் சென்றான்.

செக்கின் பக்கம் சென்றவுடன், தன்னைப் பிடித்திருந்த வார்டன் கையைத் திமிறிக்கொண்டு ஓடினான். ஒரு விநாடி திகைத்துவிட்டு, ஊதுகுழாயை ஊதிக்கொண்டு துரத்தினான் வார்டன். மற்ற வார்டன்களும், இதர அதிகாரிகளும் சேர்ந்து கொண்டனர். மாஷாணம் அவர்கள் கைக்கு அகப்படாமல், வாயுவேகத்தில் செக்கை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். நாங்கள் என்ன நடந்துகொண்டிருக்கிறது, என்ன நடக்கப் போகிறது என்பது புரிந்து கொள்ள முடியாமல் திக்பிரமை கொண்டு மதி இழந்து நின்றோம். ஓடி வந்தான் மாஷாணம். நாங்கள் கண்மூடி கண் திறப்பதற்குள், தன் மண்டையைச் செக்கில் போய் மோதினான். ஒரு விநாடி தான். மண்டை பிளந்து ரத்த வெள்ளமாகக் கிடந்தான். நாங்கள் ஆகா, ஆகா என்று மனம் பதறி துடிதுடித்து நின்றோம்.

'அடடா என்ன காரியம் செய்தார் அந்த மனுஷன்! அதன் பிறகு.'

'சிறையிலே, ஒருவன், இயற்கையாகவே இறந்தாலும் சரி, இல்லை தற்கொலை செய்து கொண்டாலும் சரி, அதன் விளைவு விபரீதமாகி விடும். மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினார்கள். விசாரணை நடந்தது. இதைப் பற்றி ஒரு குழு பரிசீலனைசெய்து யாதாஸ்தை அனுப்பியது. இதன் விளைவு சிறைக் கைதிகளைச் செக்கு இழுக்கச் செய்யக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவிட்டது' என்று முடித்தார் நண்பர்.

'வாழ்க மாஷாணம்' என்றேன் நான், உத்சாகத்துடன்.

'மனித வர்க்கத்தின் மானத்தைச் காத்தான் மாஷாணம். மாவீரர்கள் செய்த காரியங்களை விட, அதிசயமான காரியத்தைச் சாதித்த மாவீரன் அவன்' என்று சொல்லும் போதே அவர் கண்கள் கலங்குவதை நான் பார்க்காமல் இருக்க முடியவில்லை

அதிலிருந்து, தண்ணீர் விட்டோ வளர்த்தோம் என்ற பாட்டைக் கேட்கும்பொழுதெல்லாம் வெறும் கண்ணீர் மாத்திரம் வருவதில்லை. ரத்தக் கண்ணீர்தான் வரும் எனக்கு.

---

## எப்படியாவது பொழுது போக்கவா?

புதிய புதிய விஷயங்களை அறிய அவர்கள் (பிரசுரகர்த்தாக்கள்) தாகங் கொண்டிருப்பதாய் தெரியவில்லை. ஜனங்கள் சோர்ந்து களைத்துக்கிடக்கிறார்கள். ஆனால் அதன் காரணத்தை யறிய அவர்களுக்குப் பிடிக்கவில்லை காரணத்தை யறிந்தால் காரியம் செய்ய வேண்டி வருமே. யார்செய்வது? தேசத்தில் ஒரு நிமிஷம் போவது ஒரு யுகம் போல் இருக்கிறது. தேசத்தில் மாத்திரமல்ல. ஒவ்வொரு வீட்டிலும் அப்படித்தான், நிலைமை அவ்வளவு நெருக்கடியாயிருக்கிறது, எப்படியாவது பொழுதை போக்கினால் போதும். அப்படிப்பட்ட மனோபாவம் எற்பட்டிருக்கிறது. பக்கம் பக்கமாகப் புத்தகமும் பத்திரிகையும் அச்சடித்து அனுப்புவதைவிடச் சிப்பம் சிப்பமாக ரொட்டியும் பிஸ்கோத்தும் குறைந்த சந்தாவுக்கு வருஷம் பூராவும் அனுப்ப யாராவது தயாராக இருந்தால் ஏராளமான பேர் சந்தா சேரக்கூடும் போலிருக்கிறது நிலைமை. இது நடக்காது. ஆகையால் சோர்விலே பிறந்த ஒரு கேலியும் நகைப்பும்அலட்சியமும்'—பெரிய விஷயத்திலும் சரி, சிறிய விஷயத்திலும் சரி, பிறந்திருக்கின்றன. இதற்கு யார் என்ன செய்வது!

—தி ஜ. ர.

('அதுவும் செய்யலாம்'கட்டுரையில் 1934)

# எண்ணத் திவலைகள்

## கி. ரா.

எண்ணத் திவலைகளே கதை என்ற கோர்வை. எண்ணமே வாழ்க்கை.

எந்த எண்ணத்தைப் பெற்று நாம் வாழ்க்கையை வாழ்கிறோமோ அந்த எண்ணத்தின் தன்மையைப் பொறுத்தே வாழ்க்கையும் அமைகிறது.

வாழ்க்கை என்ற எண்ணத்திற்குப் புறம்பான ஒரு நிலையே, பெரும்பாலான தெய்வீகச் செல்வர்கள் பெற்று வாழ்ந்துள்ள நிலை. எண்ணத்திற்குப் புறம்பான நிலை என்ன நிலை?

எண்ணத்தின் இயல்பான நிலையே எண்ணத்திற்குப் புறம்பான நிலை. எண்ணத்தின் இயல்பே சாந்தி என்ற அமைதி.

இந்த சாந்தியைப் பெறும் வழியே சமயங்கள் காட்டும் வழி.

இந்த சாந்தியை இயல்பாய்ப் பெற்றுள்ள பெரியோரே தவத்தில் சிறந்த முனிவர்கள் என்ற பெரியோர். சாந்தியை இயல்பாய்ப் பெற்றுள்ள முனிவர்கள் கூறும் மொழிகளே நம்முடைய வேதாகம நூல்கள் எல்லாம்.

சாந்தியைப் பெறும் பற்பல வழிகளைப் பாட்டும் சமயங்களிலே காலத்தால்முதன்மையானதே வேதங்காட்டும் சனாதன மார்க்கம் என்ற நம் நாட்டு அனாதியான சமயம். எந்த சமயமாயினும், எவ்வளவு மாறுபட்ட மார்க்கங்களின் இறுதிநிலை ஒன்றே. அதுவே சாந்தி.

இந்த வாழ்க்கை என்ற எண்ண நிலையைப் போல், நிலைபெறும் வாய்ப்பு ஒருக்காலும் இல்லாத நிலை, வேறு எங்கும் இல்லை. அப்படி உள்ள நிலையில்லாத எண்ண நிலையைக்கொண்டு சிருஷ்டிக்கப்படும் 'கதை' என்ற எண்ணக் கோர்வையினால் எவருக்கு என்ன பயன்?

எண்ண நிலையைக் கொண்டு வாழ்க்கையை வாழ்ந்து, இறுதியில் சாந்தியை பெற்று, நிறைவைப் பெற வழியின்றி, இன்பதுன்பம் என்ற இருதலை வளர்ச்சித்தீயினால் தீண்டப்பெற்று, வாழ்க்கை என்றால் துன்பமும் துயரமும் நிறைந்ததே என்று எண்ணி,நைந்து வாழும் எண்ணற்ற ஜீவன்கள் நிறைந்துள்ள உலகில், மேலும் எண்ண நிலையைக் கொண்டே சிருஷ்டிக்கப் பெறும் கதைகளினால் என்ன லாபம்?

இன்று உள்ள உலகச் சூழ்நிலையில், எண்ணத்தின் இயல்பான சாந்தியைக்கைவிட்டு,எண்ணற்ற சோக சக்திகளுக்கு இரையாகி, வளர்ச்சி என்ற பெருந்தீயினால் வற்றப்பட்டு, வாழ்க்கையை ஒரு தனிப்பட்டோரின் சுயநலக் கேளிக்கையாக மாறிவிடச் செய்யும் தந்திரமான அரசியல், பொருளாதாரச் சூழ்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு, ஓடும் எண்ணற்ற மக்களுடைய அவல நிலையை எண்ணி எந்த தெய்வமும் கண்ணீர் விட்டுக் கதறி அழும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த நிலையில் மேலும் கதைகள், கவிதைகள், நாடகங்கள் என்ற பெயருக்குச் சற்றும் பொருத்தம் இல்லாத வகையில் நிமிஷத்துக்கு நிமிஷம், அச்சுயந்திரத்தின் வேகத்தினால் அச்சடித்து வெளியேற்றப்படும். 'பொருள்களை' என்ன பெயரிட்டுக் கூறுவது என்பது ஒரு பெரும் பிரச்னையாகும்.

கவிதை என்ற தெய்வீகப் படைப்புக்கும், இந்த உருவமற்ற, உயிரற்ற பொருளற்ற பிண்டங்களுக்கும் சம்பந்தம் என்ன? காவியச் சிறப்பும், கற்பனைச் செறிவும், கருத்துத் தெளிவும் உள்ள ஒரு சுவையான கவிதையை நாம் கண்டு பல நூற்றாண்டுகளாகின்றன. இடையில் ஒரு பாரதி வந்தது. நம்முடைய ஏழ்மையைச் சுட்டிக் காட்டுவதே யாகும்.

இந்த தெளிவற்ற சூழ்நிலையில் எல்லோரும் கவிகள்; எல்லோரும் கதைச் சிற்பிகள்; எல்லோரும் காவியக் கம்பர்கள். இன்னும் ஒரு பத்து ஆண்டுகள் இதே நிலை நீடிக்குமானால், எந்த நாட்டவரும் கண்டு நம்மை எள்ளி நகையாடும் நிலை வந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்றைய தமிழகத்தின் தலை சிறந்த கவி என்று கூறும் தகுதி பெற்றவர் யார்? எவருமே இல்லை. இன்றைய தலை சிறந்த கதாசிரியர் எவர்? எவரையும் காணோம்.

அன்று எழுதிய கமலாம்பாள் சரித்திரமும், வேதநாயகம் பிள்ளையின் பல பட்டரைப் பொக்கிஷமும் தான் தமிழ் நாட்டின் தற்காலத் தமிழ்க் காவியங்கள்!

அன்று, இரண்டாயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னர், எங்கும் காணமுடியாத பேரதிசயமாய், எழில் என்ற பெயரால், எண்ணற்ற பெண்டிரைக் காதல் செய்து, கவர்ந்து சென்று, கடிமணம் புரிந்த கற்பனைக் களஞ்சிங்களாய் விளங்கும் காவியங்கள்தான் இன்றும், என்றும் உள்ள காவியங்கள்.

இந்த விதம் வேறு வழியின்றி நம்முடைய இலக்கியச் செல்வத்தின் வாழ்வு என்ற வகையிலும் துயரத்தைக் கூட்டிவைக்கும் துன்பியல் நாடகமாய் விளங்கி வருகிறது வெளிப்படை,

எந்த எண்ண நிலையைப் பெற்று நாம் வாழ்கிறோமோ அந்த நிலையையே நம்முடைய வாழ்க்கையும் பெறுகிறது என்பதற்கே மேலே கூறியபடி நம்முடைய இலக்கியத்தின் நிலையைப்பற்றி, சற்று மிகைப்படுத்திக் கூறினேன்.

எண்ணத்தின் வாழ்க்கை என்று கூறுவது எப்படிப் பொருந்தும் என்று நாம் இப்போது ஆராய்

வேண்டிய அவசியம் இல்லை. எண்ணத்தின் நிலையே நாம் வாழும் வாழ்க்கையின் நிலை என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டியது இல்லை. இன்றைய நாகரிக வாழ்க்கை என்ற பெயரால் நம்முடைய பொய்-தெய்வங்கள் கொண்டுள்ள கோலமும், வாழும் வாழ்க்கையும், என்னுடைய கருத்தைத் தெளிவாய் விளக்குவதற்குப் போதுமான சான்றாகும்.

ஆகையால் எண்ணத்தின் நிலையை மாற்றிக் கொண்டால் வாழ்க்கையின் தன்மையும் மாறி விடும் என்று கூறுவது சரியாகும்.

எண்ணத்தின் தன்மையை எப்படி மாற்றுவது ?

அரசாங்க சட்டத்தினுல் எண்ணத்தின் தன்மையை மாற்ற வழி இல்லை. சமயக் குரவர்களுடைய சொல்லைக் கேட்டு நடக்கும் சீட பரம்பரை இன்று இல்லை. பின் எப்படி எண்ணத்தை மாற்றலாம் ?

இந்தக் கட்டுரையைப் போல் நிறைவைக் கூட்டிவைக்கும் கட்டுரைகளின் தொகை பெருகினுல் ஒன்று. இந்த தொனியில் எழுதும் ஆசிரியனுடைய ஆயுள் அற்பாயுளாய் விடலாம்; அல்லது அப்படி எழுதும் எழுத்தை வெளியிடும் வாய்ப்பே இல்லாமல் போய்விடலாம். ஆகையால் வேறு எப்படி வழியில் செயல்பட்டு, எண்ணத்தின் தன்மையை மாற்றுவது ?

வேறுவழியே இல்லை என்று எவரும் எண்ண வேண்டாம். பேனுவைக் கையில் பிடிக்கும் ஒவ்வொரு எழுத்தாளனும், தான் எழுதும் எழுத்தின் விளைவைப்பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பின்னர் எழுதத்தொடங்கினுல் போதுமானது.

எந்த எழுத்தாளனும், தான் எழுதும் எழுத்தைப் படித்து, வாசகர்கள் உடனே தன்னுடைய எழுத்தைக் கொண்டு வாக்கையை வாழ்ந்து வரப் போகிருர்கள் என்று எண்ணி எழுதத் தொடங்கினுல் போதுமானது. என்னுடைய கட்டுரையை இனியும் தொடர்ந்து எழுதினுல், 'இவர் என்ன வசிஷ்டரா?' என்று கேட்டு என்னைத்தாக்க வரும் நண்பர்களுக்குப் பயந்து, இந்த வார்த்தையுடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

என்னுடைய பெயரை வெளியிட வேண்டாம் என்று தான் ஆரம்பத்தில் எண்ணினேன். ஆனுல் எழுத்துக்கு வேண்டிய தன் மதிப்பை இழக்க விரும்பாமல் பெயரையும் கூறிவிட்டேன்.

---

## பாரதியின் சொல்வள செல்வாக்கு

பாரதியின் கவிதைகளை புரட்டிக் கொண்டிருந்தேன். 'பாரதி அறுபத்தாறு'வில் 'விடுதலைக் காதல்' கவிதையில் வரும் 'பேணுமொரு காலினை வேண்டியன்ருே பெண்மக்கள் கற்புநிலை பிறழுகின்ருர் ? காணுகின்ற காட்சியெலா மறைத்து வைத்து கற்புக்கற்பென்றுலகோர் கதைக்கின்ருரே!' என்ற வரிகளில் உள்ள கடைசிவரி புதுமைப் பித்தன் எழுதிய 'பொன்னகரம்'கதையின் கடைசி வரியான 'கற்புகற்பென்று கதைக்கிறீர்களே. இது தான் ஐயா பொன்னகரம்' என்ற முடிவு வாக்கியத்தை நினைவுக்கு கொணர்ந்தது.

இதுதான் ஒருகவியின் செல்வாக்கு இன்னெரு படைப்பாளிக்கு ஏற்படுவது என்பது; தன் கதையை எழுதி வந்த புதுமைப்பித்தனுக்கு முடிவுக்கு வந்ததும் பாரதி வரி நினைவுக்கு வந்திருக்க வேண்டும். தன் கதையின் முத்தாய்ப்புக்கு இதை விட வேறு சொல்லா என்று அப்படியே பொருத்தி இருக்கவேண்டும். அன்று அவரைக் கேட்டிருந்தால் சொல்லி இருப்பார். இன்றுதானே நானே கண்டேன். இதேபோல 'கரும்புத் தோட்டத்திலே' யில் வரும் '...... துன்பக்கேணியிலே எங்கள் பெண்களழுதசொல் மீட்டு முரையாயோ' என்ற வரியில் உள்ள 'துன்பக்கேணி' என்ற சொல் தான் அவர் 'துன்பக்கேணி' கதைக்கு தூண்டுதலாக இருந்திருக்கும்.

அன்று பாரதி காலம். அவனைத் திரும்பத் திரும்பபடிக்காத படைப்பாளி யார் அன்றைக்கு? ஏன், 'நேசம் மறக்கவில்லை நெஞ்சம் எனில்-நினைவு முகம் மறக்கலாமோ' என்ற வரிதானே பி. எஸ். ராமையாவின் 'நினைவு முகம் மறக்க வில்லை'என்ற சிறந்த சிறுகதையின் அடிநாதத்துக்கு ஏற்ப இசைந்த ஒரு சொல் அழகான தலைப்புக்கு தூண்டுதலாக இருந்திருக்கிறது.

பாரதியின் 'அழகு தெய்வம்' என்ற தலைப்பின் நினைவும், அதன் முதல்வரியான 'மயங்கியதோர் நினைவினிலே வரும் மயங்கியவும் சேர்ந்து தான் 'அழகு மயக்கம் என்ற என் தலைப்புக்கு மூலப்பொருளாக பயன்பட்டது. இன்றும் 'ஆங்கத் தனிப்பதர்ச் செய்திகள் அனைத்தையும்' என்ற வரியிலிருந்து பிறந்த வ. ரா. வின் 'வசந்த காலத்தை விபரீதமாகச் செய்யும் 'மனிதப்பதர்கள்' என்ற சொல்லிலிருந்து பதர்க்காரியங்கள் என்ற சொல்லை நான் உபயோகித்ததும் இந்த செல்வாக்கால் தானே.

இதெல்லாம் விட பாரதியின் 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற வரிதானே அன்று லண்டனில் இருந்த கே. சீனுவாசனுக்கு தான் பின்னுல் எப்போதோ நடத்த விரும்பிய தமிழ்ப் பத்திரிகைக்கு பெயர் வைப்பதைப்பற்றி யோசித்த போது 'மணிக்கொடி' என்ற பெயரை முன்னுல் கொண்டு வந்து தள்ளி இருக்கவேண்டும்.

இப்படி சொல்வளத்துக்கு அன்றே பாரதி தன்னை அடுத்துவந்த படைப்பாள தலைமுறையை பாதித்திருக்கின்ருனே. இன்று முப்பது ஆண்டுகளுக்குப் பின் எப்படி பாதிக்க முடியுமே. சொல்வளச் சுரங்கம் பாரதி. அதுக்குள்ளே புகுந்து இன்றய படைப்பாளி முத்துக் குளிக்காவிட்டால்—?

பாரதிக்கு எதுவும் நஷ்டமே இல்லை.

—சி. சு. செ.

# முதுமை

## டி. எஸ். இலியட் தமிழாக்கம் : செல்வம்

டி. எஸ். இலியட் [1888–1965] :— கி. பி. இரண்டாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையைப் படிக்க விரும்புவோர் இளங்கோ அடிகளைப் படிக்காமல் இருக்க முடியாது. அதேபோல இருபதாம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிதையைப் படிக்க விரும்புவோர் டி. எஸ் இலியட்டைப் படிக்காமல் விடமுடியாது. 1948ல் இலியட் நோபல் பரிசைப் பெற்றபோது அப்பரிசுக்கே பெருமையும் புகழும் கிடைத்தது. இவர் கவிஞர்; கவிதை நாடக ஆசிரியர்; விமரிசகர்; சமூகக் கட்டுரையாசிரியர். கவிதைக்காக நோபல் பரிசு கிடைத்தாலும், இவர் மற்ற இலக்கியத் துறையிலும் மிகச்சிறந்து விளங்குபவர். சொற்றொடர் ஆக்கத்தில் ஷேக்ஸ்பியரைவிடச் சிறந்தவர் என்று பெயர் பெற்றவர். நீர்த்துப் போன கவிதைக்கு இறுக்கம் தந்து, ஆங்கிலக் கவிதையை திரட்டுப் பால் ஆக்கியவர். இந்நூற்றாண்டின் தலை சிறந்த சிறு காப்பியமான ‘வேஸ்ட் லேண்ட்’ (பாழ் நிலம்)ஐ எழுதி, பெரும் புகழும், அரிய வசவும் வாங்கிக் கட்டிக்கொண்டவர். ஷேக்ஸ்பியருக்குப் பிறகு கவிதையை நாடகத்தில் புதுவிதமாய் பயன்படுத்தி வெற்றிகண்டவர். இலக்கிய விமரிசனத்தில், படைப்பாளியை மறந்து படைப்பையே கவனிக்கவேண்டும் என்பதைப் பரப்பிய நன்மை செய்தவர்.

அவரது ‘ஜெரான்ஷியன்’ என்ற கவிதைதான் ‘முதுமை’ என்ற தலைப்பில் இங்கு மொழி பெயர்த்துத் தரப்பட்டிருக்கிறது.

முதுமையைப் புரிந்துகொள்ள சிலவற்றைத் தெரிந்து வைப்பது அவசியம். (1) இலியட்டின் கவிதையில், அறிவை அடித்தளமாகக் கொண்ட லாஜிக்கைக் காண முடியாது. அதற்குப் பதிலாக உணர்ச்சியை அடித்தளமாகக் கொண்ட லாஜிக்கையே காண முயலவேண்டும். (2) ஒரு தொடர்ச்சியான, மிகவும் சிக்கலான நினைப்பு நதி, இலியட்டின் கவிதை. அதில் எத்தனையோ நினைப்புக்கள் – படித்தவை. அனுபவித்தவை —கலந்து, காலங்கடந்து நிற்கும். (3) இலியட், காலத்தைப்பற்றி அதிகம் சிந்திப்பவர். இன்னொரு கவிதையில் சொல்கிறார் :

‘நிகழ்காலமும் இறந்த காலமும்
எதிர்காலத்தில் ஒருக்கால் இருக்கலாம்;
எதிர்காலம் இறந்த காலத்தில் அடங்கலாம்’

அதனால் காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் எத்தனையோ செய்திகளை ஒன்று சேர்த்துத் தருவார் இலியட். (4) கேலி இழைந்தோடும் சோகக் கவிதை ‘முதுமை’. இதில் இலியட் எடுத்தாண்டுள்ள ஷேக்ஸ்பியரின் டெம்பஸ்ட் நாடக வரிகள், ‘முதுமை’யை எந்த கோணத்திலிருந்து படிக்கவேண்டும் என்பதைத் தெளிவாக்கும்.

‘இளமையும் முதுமையும் உனக்கில்லை;
இருப்பது இரண்டையும் கனவுகாணும்
மதியஉணவைத் தொடர்ந்துவரும் உறக்கம்.’

இருக்கின்றேன் இங்கேநான்; வறண்ட மாதத்தில்
முதிர்ந்த மனிதன்,
சிறுவன் படித்துக் காட்ட, மழையை எதிர்பார்த்து.
போனதில்லை தீய்க்கும் வாயிலருகே
போரிட்டதில்லை இளஞ்சூட்டு மழையில்,
கணுக்கால் புதையும் உவர்சதுப்பில் குறுவாள்
ஆட்டி
பூச்சிக் கடிபட்டுப் போரிட்டதில்லை.
என்வீடு தூர்ந்த வீடு.
இதற்குரியவன் —ஆன்ட்வர்ப் மதுக்கடையில்
முளைத்து,
பிரசேல்ஸில் கொப்பளித்து, லண்டனில் புள்ளி
இட்டுதிர்ந்த
யூதன் பலகணியில் மண்டியிட்டான்.
இரவில், உயர்வெளியில், வெள்ளாடு இருமும்;
பாறைகள், பாசி, ஸ்டோன்கிராப், இரும்பு,
சாணி.
அடுக்களை அவள்காப்பாள், தேநீர் கலப்பாள்,
மாலையில் தும்முவாள், சிடுசிடுக்கும் சாக்கடை
நோண்டி
நானொரு முதிர்ந்த மனிதன்,
காற்றலைக்கும் வெளியில் மரத்த தலை.

குறிகளை அற்புதங்களாக்குவார். ‘குறியினைப்
பார்த்தே தீருவோம்!’
ஒருசொல்லில் அச்சொல், ஒருசொல்லும் சொல்ல
முடியாமல்,
இருட்டு கட்டிப்போட. ஆண்டின் இளமொட்டில்
கிருஸ்துப் புலி வருகை
சீர்கெட்ட மேவில் டாக்வுட்டும், செஸ்ட்நட்டும்,
பூக்கும் ஜீடாஸ்;

வேண்டிய அவசியம் இல்லை. எண்ணத்தின்நிலையே நாம் வாழும் வாழ்க்கையின் நிலை என்பதற்கு வேறு அத்தாட்சி வேண்டியது இல்லை. இன்றைய நாகரிக வாழ்க்கை என்ற பெயரால் நம்முடைய பொய் தெய்வங்கள் கொண்டுள்ள கோலமும், வாழும் வாழ்க்கையும், என்னுடைய கருத்தைத் தெளிவாய் விளக்குவதற்குப் போதுமான சான்றாகும்.

ஆகையால் எண்ணத்தின் நிலையை மாற்றிக் கொண்டால் வாழ்க்கையின் தன்மையும் மாறி விடும் என்று கூறுவது சரியாகும்.

எண்ணத்தின் தன்மையை எப்படி மாற்றுவது ?

அரசாங்க சட்டத்தினால் எண்ணத்தின் தன்மையை மாற்ற வழி இல்லை. சமயக் குரவர்களுடைய சொல்லைக் கேட்டு நடக்கும் சீட பரம்பரை இன்று இல்லை. பின் எப்படி எண்ணத்தை மாற்றலாம் ?

இந்தக் கட்டுரையைப் போல் நிறைவைக் கூட்டிவைக்கும் கட்டுரைகளின் தொகை பெருகினால் ஒன்று. இந்த தொனியில் எழுதும் ஆசிரியனுடைய ஆயுள் அற்பாயுளாய் விடலாம்; அல்லது அப்படி எழுதும் எழுத்தை வெளியிடும் வாய்ப்பே இல்லாமல் போய்விடலாம். ஆகையால் வேறு எப்படி வழியில் செயல்பட்டு, எண்ணத்தின் தன்மையை மாற்றுவது ?

வேறுவழியே இல்லை என்று எவரும் எண்ண வேண்டாம். பேனாவைக் கையில் பிடிக்கும் ஒவ்வொரு எழுத்தாளனும், தான் எழுதும் எழுத்தின் விளைவைப்பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பின்னர் எழுதத்தொடங்கினால் போதுமானது.

எந்த எழுத்தாளனும், தான் எழுதும் எழுத்தைப் படித்து, வாசகர்கள் உடனே தன்னுடைய எழுத்தைக் கொண்டு வாக்கையை வாழ்ந்து வரப் போகிறார்கள் என்று எண்ணி எழுதத் தொடங்கினால் போதுமானது. என்னுடைய கட்டுரையை இனியும் தொடர்ந்து எழுதினால், 'இவர் என்ன வசிஷ்டரா?' என்று கேட்டு என்னைத்தாக்க வரும் நண்பர்களுக்குப் பயந்து, இந்த வார்த்தையுடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

என்னுடைய பெயரை வெளியிட வேண்டாம் என்று தான் ஆரம்பத்தில் எண்ணினேன். ஆனால் எழுத்துக்கு வேண்டிய தன் மதிப்பை இழக்க விரும்பாமல் பெயரையும் கூறிவிட்டேன்.

---

## பாரதியின் சொல்வள செல்வாக்கு

பாரதியின் கவிதைகளை புரட்டிக் கொண்டிருந்தேன். 'பாரதி அறுபத்தாறு'வில் 'விடுதலைக் காதல்' கவிதையில் வரும் 'பேணுமொரு காலினை வேண்டியன்றோ பெண்மக்கள் கற்புநிலை பிறழுகின்றார் ? காணுகின்ற காட்சியெலா மறைத்து வைத்து கற்புக்கற்பென்றுலகோர் கதைக்கின்றாரே!' என்ற வரிகளில் உள்ள கடைசிவரி புதுமைப் பித்தன் எழுதிய 'பொன்னகரம்'கதையின் கடைசி வரியான 'கற்புகற்பென்று கதைக்கிறீர்களே. இது தான் ஐயா பொன்னகரம்' என்ற முடிவு வாக்கியத்தை நினைவுக்கு கொணர்ந்தது.

இதுதான் ஒருகவியின் செல்வாக்கு இன்னொரு படைப்பாளிக்கு ஏற்படுவது என்பது: தன் கதையை எழுதி வந்த புதுமைப்பித்தனுக்கு முடிவுக்கு வந்ததும் பாரதி வரி நினைவுக்கு வந்திருக்க வேண்டும். தன் கதையின் முத்தாய்ப்புக்கு இதை விட வேறு சொல்லா என்று அப்படியே பொருத்தி இருக்கவேண்டும். அன்று அவரைக் கேட்டிருந்தால் சொல்லி இருப்பார். இன்றுதானே நானே கண்டேன். இதேபோல 'கரும்புத் தோட்டத்திலே' யில் வரும் '..... துன்பக்கேணியிலே எங்கள் பெண்களழுதசொல் மீட்டு முரையாயோ' என்ற வரியில் உள்ள 'துன்பக்கேணி' என்ற சொல் தான் அவர் 'துன்பக்கேணி' கதைக்கு தூண்டுதலாக இருந்திருக்கும்.

அன்று பாரதி காலம். அவனைத் திரும்பத் திரும்பபடிக்காத படைப்பாளி யார் அன்றைக்கு? ஏன், 'நேசம் மறக்கவில்லை நெஞ்சம் எனில்-நினைவு முகம் மறக்கலாமோ' என்ற வரிதானே பி. எஸ். ராமையாவின் 'நினைவு முகம் மறக்க வில்லை'என்ற சிறந்த சிறுகதையின் அடிநாதத்துக்கு ஏற்ப இசைந்த ஒரு சொல் அழகான தலைப்புக்கு தூண்டுதலாக இருந்திருக்கிறது.

பாரதியின் 'அழகு தெய்வம்' என்ற தலைப்பின் நினைவும், அதன் முதல்வரியான 'மயங்கிய தோர் நினைவினிலே வரும் மயங்கியவும் சேர்ந்து தான் 'அழகு மயக்கம் என்ற என் தலைப்புக்கு மூலப்பொருளாக பயன்பட்டது. இன்றும் 'ஆங்கத் தனிப்பதர்ச் செய்திகள் அனைத்தையும்' என்ற வரியிலிருந்து பிறந்த வ. ரா. வின் 'வசந்த காலத்தை விபரீதமாகச் செய்யும் 'மனிதப்பதர்கள்' என்ற சொல்லிலிருந்து பதர்க்காரியங்கள் என்ற சொல்லை நான் உபயோகித்ததும் இந்த செல்வாக்கால் தானே.

இதெல்லாம் விட பாரதியின் 'தாயின் மணிக் கொடி பாரீர்' என்ற வரிதானே அன்று லண்டனில் இருந்த கே. சீனுவாசனுக்கு தான் பின்னால் எப்போதோ நடத்த விரும்பிய தமிழ்ப் பத்திரிகைக்கு பெயர் வைப்பதைப்பற்றி யோசித்த போது 'மணிக்கொடி' என்ற பெயரை முன்னால் கொண்டு வந்து தள்ளி இருக்கவேண்டும்.

இப்படி சொல்வளத்துக்கு அன்றே பாரதி தன்னை அடுத்துவந்த படைப்பாள தலைமுறையை பாதித்திருக்கின்றானே. இன்று முப்பது ஆண்டுகளுக்குப் பின் எப்படி பாதிக்க முடியுமே. சொல் வளச் சுரங்கம் பாரதி. அதுக்குள்ளே புகுந்து இன்றய படைப்பாளி முத்துக் குளிக்காவிட்டால்--?

பாரதிக்கு எதுவும் நஷ்டமே இல்லை.

—சி. சு. செ.

உண்ண பகிர்ந்திட, அருந்த,
முணமுணப்புக் கிடையில்; லி மொஜீஸ்ல்
இரவெல்லாம் அடுத்த அறையில் நடமாடிய,
தடவும் கரமுடைய மிஸ்டர் சில்வரோ;
டிஸியன் படத்திடையே குனிந்த ஹாக காவா;
இருட்டறையில் வத்திமாற்றும் மேடம்
டி டார்ன்க்விஸ்ட்;
கதவின்மேல் ஒருகை வைத்து, முன்னறை புகுந்த
ப்ராலின் வான் கல்ப். காலி நாடாக்கள்
காற்றை நெய்யும். எனக்கில்லை பேய்கள்;
ஒருமுதிர்ந்த மனிதன், காற்றுமிகப் புகுந்தாடும்
காற்றலைக்கும் கைப்பிடி கொண்ட வீட்டில்.

இப்படிப்பட்ட அறிவுக்குப்பின் எப்படிப்பட்ட
மன்னிப்பு? இப்போது நினை:
வரலாறு காட்டும் எத்தனையோ கள்ளவழிகள்,
புனைந்த இடைவழிகள்,
பிரச்னைகள்; குசுகுசுக்கு மாசைகாட்டி ஏமாற்றும்;
வழிகாட்டும் பகட்டால். இப்போது நினை:
அதுதரும், நம்கவனம் சிதைவுற்ற வேளையில்;
நெகிழ்குழப்பம் பலகலந்து தருவதைத் தரும்,
தருதல் விழைதலைத் தூண்டும் வண்ணம். தரும்,
காலம் மிகத்தாழ்த்தி,
நம்பிக்கை வைக்காததை; இன்னும் நம்பிக்கை—
நினைவில் மட்டும்—
உள்ளதென்றால், திரும்ப சீர்தூக்கிய எழுச்சி.
தரும், மிகவிரைவில்,
மெலியோருக்கு, மறுத்தல் அச்சத்தைப்
பெருக்கும் நேரம்வரை
இல்லாமலே தள்ளக் கூடியதை. நினை :
அச்சமோ துணிவோ நம்மைக் காப்பதில்லை.
இயல்பற்ற பாவங்கள்
நம் வீரம் ஈன்றவை. புண்ணியங்கள்
துடுக்கான குற்றங்கள் நம்மீது சுமத்தியவை.
இக்கண்ணீர் சினந்தாங்கும் மரமுலுக்கிச்
சிந்தியவை.
புத்தாண்டில் புலி பாயும். நம்மையது விழுங்கும்.
நினை இப்போதாவது:
நாம் முடிவை நெருங்கவில்லை, வாடகை
வீட்டில்நான் விறைக்கும் போதும். நினை
இப்போதாவது:

நானிந்த நாடகத்தை காரணமின்றி ஆக்கவில்லை,
பிற்போக்குப் பிசாசுகள் கிளறிய
எவ்விதத் தூண்டலும் காரணமல்ல.
நானிதை எங்கும் மனந்திறந்து சொல்வேன்.
உன்னெஞ்சருகே இருந்தநான் அங்கிருந்து
விலக்கப்பட்டேன்:
அழகை அச்சத்தில் இழக்க, அச்சத்தை குறுக்கு
விசாரணையில்.
நானென் எழுச்சியை இழந்துவிட்டேன்.
நானதைக் காக்க அவசியமென்ன,
காப்பவை கலப்படமுற்றே தீரவேண்டி
யிருக்கும்போது?
இழந்துவிட்டேன் நானென் பார்வை, மோப்பம்,
கேள்வி, சுவை, ஸ்பரிசம்:
உன்னை இன்னும் நெருங்க நானவற்றை எப்படிப்
பயன்படுத்த?

இவைகள், ஆயிரஞ் சிறிய சிந்தனைகளுடன்
இவைகளின் சில்லிட்ட சன்னிதரும் லாபத்தை
நீட்டும்;
சவ்வைத் தூண்டும்; புலனுணர்வு
குளிர்ந்தவுடன்,
உறைக்கும் சாறுகொண்டு, கண்ணாடி வனத்தில்
வகையினைப் பெருக்கும். சிலந்தி என்ன செய்யும்,
இயக்கத்தை நிறுத்தும், அந்துப் பூச்சி காலத்தைக்
கடத்தும்? டி பைல்ஹாசே, ப்ரெஸ்கா, மிஸஸ்
கேமல்: எறியப்பட்டார்
நடுங்கும் கரடி சப்தரிஷி மண்டலத்துக்குமப்பால்,
சிதைந்த அணுக்களாய். கடற்குருவி காற்றை
எதிர்த்து, புயலடிக்கும்
பெல்ஜல் கூடுதுறையில், அல்லது ஹார்ன்
மேலோட,
பனியில் வெண்ணிறகுகள், வளைகுடா சொந்தம்
கொண்டாடும்,
முதிர்ந்த மனிதனை வாணிபக் காற்று துரத்தும்
துயில்தரும் மூலைக்கு.
வீட்டின் குடிகள்,

வறண்ட மாதத்தில் வறண்டமூளையின்
நினைப்புக்கள்

---

## உங்கள் காதுக்கு

எழுத்தாளர்கள் பேரணி அமைத்தவுடன் பாக் போர் நிறுத்தம் அமலாகி விட்டது. —அகிலன்

இலக்கியத்தின் குரல் கேட்க என்னைப் போன்றவர்கள் 'தீபத்தை'த் தான் நம்பிக்கொண்டிருக்கிறோம்.
— லா. ச. ராமாமிர்தம்

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒரே பத்திரிகையில் ஆசிரியனாக இருக்கிறேன். அது சற்று அசாதாரணமானது தான்.
— கி. வா. ஜகந்நாதன்

தமிழ் நாட்டில் 'தீபத்'தின் வாசகர்களைப் போல் பாக்கியசாலிகள் இனி வேறெவரும் இருக்க முடியாது.
—நா. பார்த்தசாரதி

கதைகள் போடுவதில் பத்திரிகைகள் மேற்கொண்டிருந்த வைதீகத் தன்மையை உடைத்தவன் நானே.
—ஜயகாந்தன்

'சோ' அவர்களுக்கு டை கட்டிக்கொள்ளத் தெரியலாம். —க. நா. சுப்ரமண்யம்

# ஆசிரியர் பேச்சு

சென்ற ஏடு, எழுத்து தன்னை சட்டை உரித்துக் கொண்டிருப்பதை காட்டும் என்று எழுதி இருந்தேனே? வாசகர்கள் எத்தனைபேர் அதை உணர்ந்தார்களோ? அவர்களுக்கு பட்டதோ? இந்த ஏடு இன்னும் ஒரு எட்டு அந்த திசையில். நான் சொல்வதை நம்பிவிட வேண்டாம். நீங்கள் பார்க்கும்படி தான் கேட்கிறேன், இலக்கிய விமர்சனம், ஆய்வு முறை, புதுக் கவிதை இந்த மூன்று அம்சங்களில் எழுத்து இந்த ஏழு ஆண்டுகளில் சாதனை காட்டி இருக்கிறது.

பலர், எழுத்து இந்த மூன்று துறைகளுக்கு அப்பாலும் கவனம் செலுத்தவேண்டும் என்று என்னிடம் வாதாடி இருக்கிறார்கள். நான் சமாதானம் சொல்லியும் விளக்கியும் இருக்கிறேன், எடுத்துக்கொண்டதை முதலில் கொஞ்சம் ஒருகட்டத்துக்கு கொண்டுபோவோம் என்று-ஆழ உழுகிற மனப்பான்மையில், சிறுகக்கட்டி பெருக வாழ்வுக் கொள்கையில். இப்போது நமது இலக்கிய உலகம் இருக்கிற நிலையில், நாட்டு நிலைமை இருக்கிற நிலையில் கொஞ்சம் பந்தக்காலை எட்டி நடவேண்டும் என்று எனக்குப் பட்டது. அதே சமயம் 'அகலக்கால்' நட்டு பந்தலை பலவீனப் படுத்திவிடக் கூடாதே என்று எச்சரிக்கையையும் செய்து கொண்டிருக்கிறேன். சிறுகதையும், சிந்தனையும் இனி எழுத்துவில் தன் தனக்கு உரியஇடம் பெறும். மற்ற கலைத்துறைகளும் போகப் போக. எழுத்து தன் இன்றய தனி முத்திரையுடன் அன்றய சுதந்திரச் சங்கு, மணிக்கொடி முத்திரைகளையும் சேர்த்துக்கொள்ளும், ஒரு கூட்டுக்கலப்பான இலக்கிய முயற்சியாக எழுத்து இனி செயல் படவேண்டும் என்பது என் கருத்து. யோசனைதான் என்னுடையது. நிறைவேற்ற வேண்டியவர்கள் வாசகர்களும், படைப்பாளிகளும் தானே!

**இந்த ஏட்டில்**

இந்த ஏடு நான் எதிர்பாராதவிதமாக அமைந்திருக்கிறது. ஒரு நல்ல சிறுகதை கிடைத்திருக்கிறது. தீபாவளி மலருக்காக எழுதப்பட்ட கதை. பழய மணிக்கொடிக்காரரின் கை பேனா இன்றைக்கு, காலத்துக்கு இசைய ஒரு பொருளை அழகாக கையாண்டு சித்திரித்திருக்கிறது. 'ஊர்வலத்தின்போது' 'என்று வருவானோ' என்ற கவிதை நய கதைகளை படைத்த ந சிதம்பரசுப்ரமண்யன் அசைக்க முடியாத மரபுவாதி, சந்தான பழமையில் நம்பிக்கை வைத்தவர் 'மானம் காத்த மாஷாணம்' காந்திகால நாட்களில் பிறந்திருக்க வேண்டிய கதை. இன்று காந்தீயத்தை உணர்த்துகிற கதையாக பிறந்திருக்கிறது. சத்யாக்ரகியான மாஷாணத்திலிருந்து தான் இன்றைய போர்முனை ஜவான் உருவாகி இருக்கிறான்.

அடுத்து நமது நாடக இலக்கியம் பற்றிய கட்டுரை. பி. எஸ். ராமையா மணிவிழா நாடகக் கருத்தரங்கத்துக்கு தலைமை வகித்த டாக்டர் மு. வரதராசனார் 'நிகழ்த்திய சொற்பொழிவு'. மு. வ. சிந்திக்கிறவர். எல்லாம் தமிழில் இருக்கிறது என்று பழம் பெருமை பேசும் பழம் பண்டித மனப்பான்மைக்காரரும் இல்லை' புதுமையை பார்க்கிற, வரவேற்கிற ஒரு 'அகடெமிஷியன்'. 'ஒரு ஷேக்ஸ்பியரை எங்கோ மூலையில் படைத்துவிட்டு தமிழகத்தைவறட்சியாகவைத்துவிட்ட கடவுள்மீதே பட்சபாதக் குற்றம் சாட்டுகிறார். அந்த அளவுக்கு உண்மை நிலை அறிந்து கொண்டது மட்டுமல்லாமல், வாய் விட்டும் சொல்லும் துணிச்சல் கொண்டவரது ஆராய்ச்சிக் கட்டுரை. நாடக இலக்கிய படைப்பாளிகளுக்கு ஒரு தூண்டுகோல்.

பாரதிக்குப் பின் பாரதிதாசன். அவரும் மறைந்து கொஞ்சம் நாளாகிவிட்டது. 'அழகின் சிரிப்பு' என்ற அவரது கவிதைத் தொகுப்பை ஆய்வு செய்திருக்கிறார் சி. கனகசபாபதி. விருதுநகர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருக்கிறார். முறையான தமிழ்ப்படிப்பு ரசனையை கெடுத்துவிடாது என்பதுக்கு அவர் ஒரு உதாரணம். எழுத்து வாசகர்களுக்கு அவர் எழுத்து ரொம்ப பழக்கமானதே. புதுக் கவிதை என்பது சங்ககால மரபு வழி வருவதே என்றும் சங்ககால கவிதைகள் வெறும் போட்டோக்கள் இல்லை. இமேஜிஸம் என்கித படிமவியல் பாங்குக்கு பேர் போன இலக்கிய வளமானவை என்று காட்டும் திறனாய்வாளர் பாரதிதாசனுக்கு உரிய இடத்தை ஆராய்கிறார்.

கி. ரா. மற்றொரு மணிக்கொடிக்காரர். வ.ரா. மணிக்கொடி மாதிரி எழுத்துவை நடத்த ஆசை என்றேன். வந்த இடத்தில் கட்டுரை எழுதிக் கொடுத்தார். 'எண்ணத் திவலைகள்' இன்று படைப்பு சீர்கேட்டுள்ள நிலைமையை அலசுகிறது. நானும் இன்னொரு மணிக்கொடிக்காரன். ஏதோ கதைகளை எழுதிவந்தவன். இப்போது க. நா. சு. கொட்டிக் கொட்டி விமர்சனத்தில் புகுந்தவன். இப்போது வ, ரா. மாதிரி சிந்திக்க ஆசைப்படுகிறேன். 'தமிழன் சிந்திக்க' அந்த ஆசையின் விளைவு.

'உலகளந்த உத்தமர்கள்' ஒரு தார்மீகக் கோபம் தொனிக்கும் கட்டுரை. சு. சங்கரசுப்ரமண்யன் எழுத்து, எந்த விதமான—'இன்ஹிபிஷன்' என்கிறோமே-மனதிலே ஒதுக்கங்கள் அவை இல்லாமல் சாடுகிற சொற்கள்.

பிறநாட்டு இலக்கிய வளத்தை தமிழன் அறியவைக்கும் முயற்சியில், சமீபத்தில் மறைந்துவிட்ட நோபல் பரிசு பெற்ற பிரிட்டிஷ் கவி டி. எஸ். இலியட்டின் நல்ல கவிதைகளுள் ஒன்றின் மொழி பெயர்ப்பு முதுமை. நம் கவிகள் கையாள வேண்டிய விஷயத்துக்கும், அமைப்புக்கும் அவரது சோதனை தூண்டுதலாக இருக்கக் கூடும். இதை மொழி பெயர்த்த செல்வம் ஒரு இலியட் ரசிகர். இங்கிலீஷ் இலக்கிய பரிச்சயம் சிறப்பாக உள்ளவர்.

இவையெல்லாம் சேர்ந்து இந்த ஏட்டை கருத்தாழமானதாக இலக்கிய வளமானதாக ஆக்குகின்றன என்று என்க்குப் படுகிறது நீங்கள் படித்துவிட்டு உங்கள் மனதை எனக்கு தெரிவியுங்கள்.

சி. சு. செ.

## எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சொர்க்கத்தில் சம்பாஷணை | வ. ரா. | ரூ. | 3-00 |
| 2. | வசந்த காலம் (கட்டுரைகள்) | ,, | ரூ. | 3-00 |
| 3. | பதினெட்டாம் பெருக்கு (சிறுகதைகள்) | ந. பிச்சமூர்த்தி | ரூ. | 4-00 |
| 4. | வழித்துணை (கவிதைகள்) | ,, | ரூ. | 2-00 |
| 5. | அகல்யை (ஓரங்க நாடகங்கள்) | கு. ப. ரா. | ரூ. | 4-00 |
| 6. | ஆண்சிங்கம்(சிறுகதை) | வல்லிக்கண்ணன் | ரூ. | 4-00 |
| 7. | சில விஷயங்கள் (கட்டுரைகள்) | சிட்டி | ரூ. | 3-00 |
| 8. | சத்யாக்ரகி (சிறுகதைகள்) | சி. சு. செல்லப்பா | ரூ. | 4-00 |
| 9. | மணல் வீடு ,, | ,, | ரூ. | 4-00 |
| 10. | கோடை வயல் (கவிதைகள்) | தி. சோ. வேணுகோபாலன் | ரூ. | 1-25 |
| 11. | கனவுப் பறவை (சிறுகதைகள்) | கர்ணன் | ரூ. | 2-50 |

விவரங்களுக்கு எழுதவும்

கிடைக்குமிடம் :—

**எழுத்து பிரசுரம்**

19-A, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-5.

---

## எழுத்து

**புது சந்தா விகிதம்**

ஜனவரி 1966 முதல்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 6-00 |
| வெளிநாடுகளுக்கு | ரூ. 8-00 |
| தனிப்பிரதி | 50 பைசா |

பிரதி இங்கிலீஷ் மாதம்
முதல் தேதி வெளிவரும்

விவரங்களுக்கு :

**எழுத்து**

19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5

## EZHUTTHU

Tamil literary monthly

### ADVERTISEMENT TARIFF

*INSIDE PAGE*

| | | | |
|---|---|---|---|
| Full Page | 15×20 cms | | Rs. 80-00 |
| Half ,, | 15×10 / 7½×20 | ,, | Rs. 40-00 |
| Quarter ,, | 7½×10 / 15×5 | ,, | Rs. 20-00 |
| Back cover | | | Rs. 100-00 |
| Inside covers | | | Rs. 90-00 |

*Concession for Contract Page*

**EZHUTTHU**

19-A, Pilliar koil St., Madras-5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Cenrtal Press, 97, Big Street, Triplicane Madras-5